DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

# UTHAYAN உதயன்

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit

$1.00
416-752-1524 www.uthayannews.ca

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1394 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 23, 2022

## Home Life Future Realty Inc Brokerage Inc, hosted its Annual Sales Awards Gala



## செல்வா வெற்றிவேல் தலைமையிலான வீடு விற்பனை முகவர் நிறுனம் Home Life Future Realty Inc Brokerage நிறுவனத்தின் விருது விழா

ஸ்காபுறோவில் வெற்றிகரமாக இயங்கிவரும் செல்வா வெற்றிவேல் அவர்கள் தலைமையிலான வீடு விற்பனை முகவர் நிறுனம் **Home Life Future Realty Inc Brokerage** தனது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை கடந்த சனிக்கிழமை 17ம் திகதி **Brighten Convention Centre** விழா மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.

வெற்றிகளை ஈட்டிய வீடு விற்பனை பிரதிநிதிகள் தங்கள் விற்பனை அளவிற்கு ஏற்ப விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்.

(உள்ளே விபரமான கட்டுரை 14ம் பக்கத்தில்)

## Scarborough's Royal LePage - Ignite and Unite Brokerage hosted its Annual Sales Awards Gala

## Royal LePage - Ignite and Unite Brokerage நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் விழா



ஸ்காபுறோவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Royal LePage - Ignite and Unite Brokerage** நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் விழா கடந்த 18-12-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கலந்து கொண்ட நிறுவனத்தின் தலைவர் சுகன் சிவராஜா மற்றும் அவரது சகோதரர்களான வீடு விற்பனை முகவர்கள் திருவாளர்கள் குமார் சிவராஜா ராஜ் சிவராஜா மற்றும் உதயன் சிவராஜா ஆகியோருக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்


Happy
Holidays
இனிய விடுமுறைகால
நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

உதயன் கதிரோட்டம்

# உலகிற்கு சீனாவின் புத்தாண்டுப் பரிசாக மீண்டும் தொற்று நோயா?

கோவிட்- 19 தொற்று நோயை உலகிற்கு ‘அறிமுகம்’ செய்த செஞ்சீனாவில் மீண்டும் நோய்த் தொற்று மோசமாகப் பரவிய வண்ணம் நாட்டு மக்களை பரிதாபப்படும் வகையில் தாக்கத் தொடங்கியுள்ளது என்பதை செய்திகள் வாயிலாக அறியக் கூடியதாகவுள்ளது. . தற்போது இத்தொற்று சீனாவில் மீண்டும் தலைதூக்கி தீவிர நிலையை அடைந்திருக்கிறது.

கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டுக்கான பூச்சிய கொள்கையை முன்னெடுத்தும் கூட, அந்நாட்டில் இத்தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. அதேநேரம் இத்தொற்றின் தாக்கம் மற்றும் பாதிப்புகளில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்கான முயற்சிகளில் தற்போது உலகம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஊலகில் உள்ள ஒவ்வொரு நாடும்- அது வளர்ச்சியடைந்த நாடோ அல்லது வளர்ச்சியடையாமல் வறுமையில் வாடும் மக்களைக் கொண்ட நாடோ- தங்கள் நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்புக் கொண்டவையாக உள்ளன என்பதே உண்மை. இந்த சூழலில்தான் இத்தொற்று மீண்டும் சீ-னாவில் தலைதூக்கி இருக்கிறது. இது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது. அதன் விளைவாக அமெரிக்காவிலும் இந்தியாவிலும் இத்தொற்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நவீன அறிவியல் உலகில் மனித ஆரோக்கியத்திற்கு பெரும் சவாலான கொவிட் 19 தொற்று, 2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் நகரில் தோற்றம் பெற்றது. இத்தொற்று தோற்றம் பெற்ற குறுகிய காலப்பகுதிக்குள் உலகம் முழுவதும் பரவியதோடு மில்லியன்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்டது. அத்துடன் கோடிக்கணக்கானோரை பாதிக்கவும் செய்திருக்கிறது. அதன் ஊடாக அத்தொற்று வரலாற்றில் அழியாத கறையையும் ஏற்படுத்தி விட்டது.

இத்தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டித்து விடுவதற்கு தேவையான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் வழிகாட்டல்களும் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தோடு இதன் அச்சுறுத்தலை முறியடித்து மக்களை மீட்டெடுப்பதற்குத் தேவையான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து புழக்கத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனமும் மருத்துவ நிபுணர்களும் விஞ்ஞானிகளும் இது தொடர்பில் இரவுபகல் பாராது அயராது உழைத்தனர்.

அதன் பயனாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தும் தடுப்பூசி அவசர தேவையின் நிமித்தம் புழக்கத்திற்கு வந்தது. உலக வரலாற்றில் தொற்று நோயொன்றுக்கு எதிரான தடுப்பூசியொன்று குறுகிய காலப்பகுதிக்குள் குறிப்பாக ஒரு வருட காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டு, புழக்கத்திற்கு வந்தது இதுவே முதற்தடவையாகும்.

இத்தடுப்பூசியானது கொவிட் 19 தொற்றின் அச்சத்துக்கும் பீதிக்கும் உள்ளாகி இருந்த மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. இத்தொற்றின் சவாலை முறியடித்து விட்டதாக மருத்துவ விஞ்ஞானிகள் நம்பிக்கையை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொரு நாடும் போட்டி போட்டது. அதனை தம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த நாடுகளும் இத்தொற்றின் அச்சுறுத்தலில் இருந்து கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின. இதன் பயனாக இத்தொற்றின் அச்சுறுத்தல் உல கில் கட்டம் கட்டமாக நீங்கலானது. அத்தோடு உலகமும் இயல்பு நிலைக்கு திரும்பத் தொடங்கியது. இந்த நிலையில் 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியாகும் போது இத்தொற்றின் அச்சுறுத்தலும் தாக்கமும் பெரிதும் வீழ்ச்சியடைந்தது. அதன் பயனாக உலகமும் இயல்பு நிலைக்குத் திரும்பலானது. அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்கள் மற்றும் தடுப்பூசியின் பயனாக கடந்த 10 - 15 மாதங்களாக இத்தொற்றின் அச்சுறுத்தல் பெரிதும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகிறது. ஆனால் திடீரென சீனாவில் நோய்த் தொற்று அதிகரித்து முன்னரைப் போன்று உலகெங்கும் பரவி மக்களை உயிராபத்திற்குள் கொண்டு செல்லும் ஆபத்து தோன்றுவதை எச்சரிப்பதாக வெளிவரும் அறிக்கைகளையும் அறிவுறுத்தல்களையும் நாம் உதாசீனம் செய்து விடல் ஆகாது.

# கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28ஆவது குளிர் கால ஒன்றுகூடலும் கலைவிழாவும்

கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28ஆவது குளிர் கால ஒன்றுகூடலும் கலைவிழாவும் எதிர்வரும் டிசம்பர் 30ம் திகதி வெள்ளிக்கிழமை Rough River Community Center, Markham என்ற இடத்தில் மாலை 5:30 மணிமுதல் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது.

அன்றயதினம் பிள்ளைகளின் பல விதமான கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு நிகழ்வும், இரவு விருந்தும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து, உங்கள் உறவுகள் நண்பர்களை சந்தித்து மகிழ அன்புடன் அழைக்கின்றனர்.

உங்கள் வரவை எதிர்பார்க்கும் நிர்வாகத்தினர்.

சித்தன்கேணி ஒன்றியம் - கனடா.

**மேலதிக விபரங்களுக்கு:**

| | |
|---|---|
| **மணிகண்டன்:** | (416) 844-0706 |
| **லிசா:** | (416) 838-3239 |
| **குமுதினி:** | (647) 782-1977 |

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# Royal LePage - Ignite and Unite Brokerage நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் விழா









ஸ்காபுறோவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Royal LePage - Ignite and Unite Brokerage** நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் விழா கடந்த 18-12-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கலந்து கொண்ட நிறுவனத்தின் தலை-வர் சுகன் சிவராஜா மற்றும் அவரது சகோதரர்களான வீடு விற்பனை முகவர்கள் திருவாளர்கள் குமார் சிவராஜா ராஜ் சிவராஜா மற்றும் உதயன் சிவராஜா ஆகியோருக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

அன்றைய விருதுகள் வழங்கும் விழாவில் பல இளைய தலைமுறை விற்பனை முகவர்கள் முழுமையாக தங்களை அர்ப்பணித்து செயற்பட்ட காரணத்தால் பலர் உயர் விருதுகளைத் தட்டிக் கொண்டார்கள் என்பதை காணக் கூடியது.

தமிழ் பேசும் விற்பனைப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை எட்டக்கூடிய அளவிற்கு ஏனைய சமூகம் சார்ந்த விற்பனைப் பிரதிநிதிகளும் விற்பனைக்கான சாதனை விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள் மேற்படி வைபவத்தில் ரொறன்ரோ வைத்தியசாலைக்கு வழங்குவதற்காக நிதி சேகரிப்பு பணியும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**Rich Cakes by Araviram**

றிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**
**Contact:**
**Raguram - 647 648 1154**

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து உயர் வேளாளர் குல மகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம். வயது 33.
Completed Doctor of Medicine (Caribbean International Medical University) – Awaiting for Residency Assignment
Proposal from Canada, USA, UK & Sri Lanka will be considered.
**தொடர்புகட்கு:** (416) 282-5379
**அல்லது** (416) 953-8297
Email: Kandiah4u@hotmail.com

**மலையாள மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்பு கொண்டால், 100% "வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன் - மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 7 நாட்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன். உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி



ஸ்ரீமத் சுவாமிஜி
+94 710192687
www.facebook.com/SrimathSuwamiji
VJ-COLOMBO

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசியக் கொள்கைகளைத் திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் சுயாதீன நிறுவனமொன்றை நிறுவுவதற்கான சிரேஷ்ட அதிகாரிகளின் குழு

தேசியக் கொள்கைகளைத் திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் சுயாதீன நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கான, சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் முதலாவது கூட்டம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

இக்கூட்டத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் நிதி ஆணைக்குழுவின் தலைவர் சுமித் அபேசிங்க ஆகியோரும் பங்கேற்றனர்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் பிரகாரம், தேசிய கொள்கைகளை திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் தேசிய சபையொன்று நியமிக்கப்பட்டதாகவும், அதன் கீழ் 02 உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்ட தாகவும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று செயல்படும்.

அதன் கீழ், நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கு அவசியமான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காக தேசிய சபை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழு கடந்த டிசம்பர் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முதல் தடவையாக கூடியபோதே, "தேசியக் கொள்கைகளைத் திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் சுயாதீன நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கான சிரேஷ்ட அதிகாரிகள் குழு" நியமிக்கப்பட்டது.



2023 ஆம் ஆண்டு முதல் அடுத்த 25 வருடங்களுக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல் எனும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் நோக்கை நிறைவேற்றும் பொறுப்பு இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




இதற்கமைய புதிய தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை டிசம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்புமாறு ஜனாதிபதியின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும் இதன்போது நாட்டில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் விளக்கினார்.

புதிய தேசியக் கொள்கையின் வரைவு 27.12.2022 ஆம் திகதிக்குள் தயாரிக்கப்பட்டு, குழு உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டு இறுதி அறிக்கை 15.01.2023 ஆம் திகதிக்குள் சட்ட மூலமாக தயாரிப்பதற்காக, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜே.எஸ். சந்திரகுப்தா உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# "புலம்பெயர் தமிழர் நலவாரியம்" அமைத்த முதல்வர் ஸ்டாலின் தலைவராக கார்த்திகேய சிவசேனாபதி நியமனம்



புலம்பெயர் தமிழர் நலவாரியம் அமைத்து, அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: "வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கென நலத் திட்டங்கள், அவர்களுக்கான தூதரக உதவிகள், செம்மொழியாம் தமிழ்மொழியைத் தழைத்தோங்கச் செய்திட வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி, கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கென பல்வேறு சீர்மிகு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

அந்த வகையில், பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்திடவும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்திடவும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, "வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம்" 2011-ம் ஆண்டு மார்ச் 1-ம் நாள் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அரசால் இயற்றப்பட்டது. அதோடு, "புலம்பெயர் தமிழர் நலவாரியம்" ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்கென நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அப்போது அறிவிக்கப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, முந்தைய ஆட்சியாளர்கள் அதனை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

இந்த நிலையில், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தபிறகு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், "வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் தலைவர், அரசுசார் அலுவலர்கள் மற்றும் அயலகத் தமிழர் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்டு புலம்பெயர் தமிழர் நல வாரியத்தினை அமைத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, புலம்பெயர் தமிழர் நலவாரியத்தின் தலைவராக திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், பழையகோட்டையைச் சேர்ந்த கார்த்திகேய சிவசேனாபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

மொரிஷியஸ் நாட்டில் வசிக்கும் ஆறுமுகம் பரசுராமன், லண்டனில் வசிக்கும் முஹம்மது பைசல், ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் சித்திக் சையது மீரான், வடஅமெரிக்காவில் வசிக்கும் கால்டுவெல் வேள்நம்பி, சிங்கப்பூரில் வசிக்கும் ஜி.வி.ராம் என்கிற கோபாலகிருஷ்ணன் வெங்கடரமணன், மும்பையில் வசிக்கும் அ. மீரான், சென்னையில் வசிக்கும் வழக்கறிஞர் புகழ்காந்தி ஆகியோர் அரசு சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசு சார்ந்த உறுப்பினர்களாக - பொதுத் துறைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர், வெளிநாடுவாழ் தமிழர் தொடர்பான பணிகளைக் கவனித்து வரும் அரசு சிறப்புச் செயலாளர் / அரசு இணைச் செயலாளர் / அரசு துணைச் செயலாளர், பொதுத் துறை, மேலாண்மை இயக்குநர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் ஆணையர் உறுப்பினர் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாரியத்தில் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம், ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். இவ்வாரியம், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கான நலத் திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்திட ஏதுவாக, 5 கோடி ரூபாய் "வெளிநாடுவாழ் தமிழர் நலநிதி" என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், மூலதனச் செலவினமாக 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மற்றும் தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்களின் விவரங்களைச் சேகரிப்பது அவசியமாதலால், அவர்கள் குறித்த தரவுத்தளம் ஒன்று ஏற்படுத்தப்படும். இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம், மருத்துவக் காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும். வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள், அங்கு பணியின்போது இறக்க நேரிடின், அவர்களது குடும்பத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலினின் இத்தகைய முனைப்பான நடவடிக்கை, வெளிநாடுகளில் தேமதுரத் தமிழோசை பரவுவதற்கும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் இன்னல்களைப் போக்குவதற்கும், அவர்களுக்கான நலத் திட்டங்களைச் செம்மையுறச் செயல்படுத்துவதற்கும் உறுதுணையாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை".

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் இடம் பெற்ற இளம் இந்துக் குருமார்களுக்கான விசேட பயிற்சி பட்டறை



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையுடன் இணைந்து நடத்திய இளம் இந்துக் குரு மார்களுக்கான விசேட பயிற்சி பட்டறை சனிக்கிழமை (17) காலை மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட இந்து மத பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள் மற்றும் வளவாளர்களாக முனீஸ்வரன் ஆலய தர்மகர்த்தாவும் யாழ் பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பத்ம நாபசர்மா கணபதி ஹோமம் வழிபாடுகள் பற்றிய சிறப்பு உரையாற்றினார்.



இந்நிகழ்வானது காலை 9:30 மணி முதல் மதியம் 12 மணி வரை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஒழுங்குகளை மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருவாளர் இ. நித்யானந்தன் ஏற்பாடு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

கனடிய செய்திகள் Canadian News

# கனடியத் தமிழர்களால் யாழ்.தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் பத்து மில்லியன் பெறுமதியான மருந்துகள் நன்கொடை!

Canadian Tamils donate 10 million rupees worth of life saving medicines to Tellipalai Trail Cancer Hospital.

Canadian Tamil Congress (CTC) hosts Tamil Canadian Walk-a-thon every year and proceeds from the walk-a-thon has supported several different charitable causes in the past including the Sick Kids Foundation, Canadian Cancer Society, Centre for Addiction and Mental Health (CAMH) and Holland Bloorview Kids Hospital.

As Sri Lanka continues to suffer from its worst financial slump, hospitals increasingly face a shortage of life-saving medicines. Hospitals and health professionals across the island continue to plead for help through donations to purchase basic life-saving medical supplies. Cancer hospitals like the Thellipalai Hospital struggle to maintain a stock of essential medicine to maintain uninterrupted patient treatment.

This year, the 14th annual Tamil Canadian Walk-a-thon raised funds to provide life saving medical supplies to 6 hospitals across Sri Lanka. The first shipment of medicine supplies organized by the Canadian Tamil Congress was handed over to the Tellipalai Trail Cancer Hospital on Tuesday December 20th 2022:

Former board of director at Canadian Tamil Congress, Mr. Sivam Velupillai, Founder of Sivapoomi Trust, Dr. Aru Thirumurugan, Regional Director of Health Services (RDHS) for Jaffna, Dr. A. Ketheeswaran, Dean of Medical faculty at the University of Jaffna, Dr. R. Surenthirakumaran, Secretary for Tellipalai Trail Cancer Hospital Patients Welfare Society Mr. C. Hariharan, doctors, nurses and staff participated at this medicines handover ceremony today.

---------------------------------------------

யாழ். தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் பத்து மில்லியன் பெறுமதியான மருந்துகள் கனடியத் தமிழர்களால் நன்கொடை!

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"



கனடியத் தமிழர்கள் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான உயிர் காக்கும் மருந்துகளைத் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். கனடியத் தமிழர் பேரவை, ஆண்டு தோறும் நடாத்தும் நிதிசேர் நடை பவனி ஊடாகப் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர் காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 செப்ரெம்பர் மாதம் 11 ஆம் தேதி கனடியத் தமிழர் பேரவையினரால் பதினான்காவது வருடாந்த தமிழ்க் கனடிய நிதிசேர் நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் வழங்குவதெனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் முதற்கட்டமாக கனடியத் தமிழர் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்ட முதல் தொகுதி மருந்துப் பொருட்கள் இன்று செவ்வாய்க்கிழமை 20 ஆம் தேதி, மாலை 4:30 மணியளவில் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்குக் கையளிக்கப்பட்டது.





கனடியத் தமிழர் பேரவையின் முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர் சிவம் வேலுப்பிள்ளை, சிவபூமி அறக்கட்டளையின் நிறுவனர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) கலாநிதி ஏ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் ஆர்.சுரேந்திரகுமரன், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் சி.ஹரிஹரன், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் இன்று இடம்பெற்ற மருந்துகளை வழங்கும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

எதிர்வரும் வாரங்களில் ஏனைய ஐந்து மருத்துவமனைகளுக்குமான நன்கொடைகள் கனடிய தமிழ் காங்கிரஸினால் ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக்கப்படும்.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3


ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உலக செய்திகள் World News

# சீனாவில் பரவும் கொரோனா திரிபு வைரஸ் இந்தியாவிலும் புகுந்தது



சீனாவில் 2019 டிசம்பரில் தோன்றிய கொரோனா வைரஸ் பெருந்தொற்று நமது நாட்டில் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் சீனா, ஜப்பான், தென்கொரியா, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் தற்போது கொரோனா தொற்று திடீர் எழுச்சி பெற்று வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையில் டெல்லியில் மத்திற சுகாதார அமைச்சர் தலைமையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் விழிப்புடன் இருக்கவும், கண்காணிப்பை பலப்படுத்தவும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தவும், முகக்கவசம் கட்டாயம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்தநிலையில், சீனாவில் அதிவேக கொரோனா வைரஸ் பரவலுக்கு காரணமாக கருதப்படும் பிஎப்-7 ஒமைக்ரான் திரிபு இந்தியாவிலும் கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. குஜராத்தில் 2 பேரும் ஒடிசாவில் ஒருவரும் பிஎப்-7 ஒமைக்ரான் திரிபால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

# "சீன ஊடுருவல் பற்றி மத்திய அரசு விவாதிக்க மறுப்பது கவலைக்குரியது" — சோனியாகாந்தி

சீன ஊடுருவல் பற்றி மத்திய அரசு விவாதிக்க மறுப்பது கவலைக்குரியது என்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கூறினார்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் பொதுக்குழு கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.பி.க்கள் முன்பு சோனியா காந்தி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

நமது எல்லையில் சீனாவின் அத்துமீறல் தொடர்வது கவலைக்குரிய விஷயமாகும். சீனாவின் ஊடுருவல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசு பிடிவாதமாக மறுக்கிறது. இது கண்டனத்திற்குரியது.

தீவிர அக்கறையுள்ள வி'யங்களில் மவுனம் காப்பது சரியல்ல. சீனா நம்மை தொடர்ந்து தாக்க துணிவது ஏன்? இந்த தாக்குதலை தடுக்க என்ன தயார் செய்யப்பட்டுள்ளது? மேலும் என்ன செய்ய வேண்டும்? எதிர்காலத்தில் சீன ஊடுருவுவதை தடுக்க அரசின் கொள்கை என்ன?

சீனாவுக்கு நாம் ஏற்றுமதி செய்வதைவிட இறக்குமதி அதிகமாக செய்கிறோம். சீனாவின் ராணுவ விரோத போக்குக்கு பொருளாதார பதில் இல்லாதது ஏன்? இந்த மோதலில் இருதரப்பில் இருந்தும் ஒருசில வீரர்களுக்கு சிறுகாயம் ஏற்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் வெளிப்படையான விவாதம் தேவை. இதை நாடே எதிர்பார்க்கிறது. பொது மக்களின் கொள்கைகளை, செயல்களை விளக்குவதும் அரசின் கடமையாகும் எல்லாம் நன்றாக இருக்கிறது என்று அரசு தெரிவித்தபோதிலும் பொருளாதார நிலை தொடர்ந்து துயரத்தில் இருக்கிறது. டெல்லி, குஜராத் தேர்தல் முடிவுகள் துரதிருட்வசமானவை. இமாச்சல பிரதேச மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு சோனியா பேசினார்.

முன்னதாக, இந்திய - சீன எல்லையில் நிலவிவரும் பிரச்சனை குறித்து விவாதிக்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை அருகே நடைபெற்ற எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின.

இதில் சோனியாகாந்தி உள்ளிட்ட காங்கிரஸ் எம்பிக்கள், கனிமொழி உள்ளிட்ட திமுக எம்பிக்கள் மற்றும் பிற எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# கொரோனா குறித்து இந்தியர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை — சீரம் தடுப்பூசி நிறுவன CEO கருத்து



கொரோனா தொற்று குறித்து இந்தியர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று சீரம் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனத்தின் சிஇஓ ஆதர் பூனாவாலா தெரிவித்துள்ளார்.

டெல்லியில் ஆலோசனை

சீனா, ஜப்பான், அமெரிக்கா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில், இது குறித்த ஆலோசனைக் கூட்டம் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில், சுகாதாரத் துறை செயலாளர்கள், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் ராஜிவ் பல், நிதி ஆயோக் (சுகாதாரம்) உறுப்பினர் வி.கே. பால், தொற்றுநோய்களுக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு தலைவர் என்.எல். அரோரா, உயிரிதொழில்நுட்ப துறை செயலாளர் ராஜேஷ் கோகலே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர் தனது ட்விட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, "கொரோனா தொற்று பல நாடுகளில் அதிகரித்துள்ளதை அடுத்து வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கொரோனா இன்னும் முடிவுக்கு வரவில்லை. எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அதேநேரத்தில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்பதற்கான உத்தரவை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நான் பிறப்பித்துள்ளேன். எத்தகைய ஒரு சூழலையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

வி.கே. பால் (நிதி ஆயோக் உறுப்பினர்): "முன்னெச்சரிக்கைக்கான 3-வது கொரோனா தடுப்பூசியை 27-.28 சதவீத மக்களே போட்டுக் கொண்டுள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் முன்னெச்சரிக்கை தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது கட்டாயம். அதேபோல், மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்குச் செல்லும்போது அனைவரும் முகக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும்".

இந்நிலையில், கொரோனா தொற்று குறித்து இந்தியர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தடுப்பூசி தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் ஆதர் பூனாவாலா தெரிவித்துள்ளார். சீரம் நிறுவனத்தின் தலைமை செயல் இயக்குநரான அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:

"சீனாவில் கொரோனா தொற்று அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது. எனினும் நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், நாம் சிறப்பான முறையில் தடுப்பூசி பாதுகாப்பை பெற்றிருக்கிறோம். அதேநேரத்தில், மத்திய அரசும் சுகாதாரத் துறையும் வெளியிடும் வழிகாட்டு நெறிமுறைகளை நாம் கட்டாயம் பின்பற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# அவுஸ்திரேலியா விக்டோரியா தமிழ்ச் சங்கத்தின் நரே வொரென் வளாகம் நடத்திய வருடாந்த பரிசளிப்பு விழா



அவுஸ்திரேலியா மெல்பேர்னில் 40 வருடங்களுக்கு மேலாக புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி பயிற்றுவிப்பதில் முன்னணி வகிக்கும் விக்டோரியா தமிழ்ச் சங்க தமிழ்ப் பாடசாலைகளின் நரே வொரென் வளாகம் தனது வருடாந்த பரிசளிப்பு விழாவை Holt பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ (Hon. MP Cassandra Fernando) தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (18/12/22) கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு வகுப்புகளிலும் பல பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்கியதுடன், விக்டோரியா மாநிலத்தால் நடாத்தப்படும் VCE தமிழ் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உயர் விருதும், நரே வொரென் வளாகத்தில் அதிக மதிப்பெண்ணைப் பெற்ற மாணவி நிருத்திகா தவீசனுக்கு $500 பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கடந்த 25 ஆண்டுகளாக, விக்டோரியா மாநிலத்தால் VCE தமிழ் பரீட்சை நடாத்தப்படுகிறது. அண்மைக் காலங்களில் அதிகமான மாணவர்கள் VCE பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக தேர்வு செய்து வருகிறார்கள். இனி வரும் காலங்களில், மேலும் பல மாணவர்கள் தமிழை VCE பரீட்சையில் ஒரு பாடமாக தெரிவு செய்வதை ஊக்குவிப்பதற்காக நரேவொரென் வளாகத்தில் வெட்டு புள்ளி 40க்கு மேல் பெறும் மாணவர்களுக்கு $1000 பணப் பரிசு வழங்கிக் கௌரவிக்க பெற்றோர் சங்கம் எண்ணியுள்ளது.

மேலும், பரிசளிப்பு விழாவின் இறுதியில், அவுஸ்திரேலியா மண்ணில் தமிழ் சமூகத்தின் கலை, கலாச்சார, சமய வளர்ச்சிக்கும், தமிழ் தேசியத்திற்கும், தமிழ்க்கல்வி, ஊடகத்துறையின் வளர்ச்சிக்கும், தாயக உதவித்திட்டங்களுக்கும் அயராது 1977ம் ஆண்டுமுதல் அவர் மறையும் 2012ம் ஆண்டு வரை உழைத்த அமரர் சோமா சோமசுந்தரம் அவர்களுக்கு யேசசந றுயசசநெ ஏவயு தமிழ்ப் பாடசாலை சமூகத்தினால் சாதனைத் தமிழன் விருதினை Holt மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ (Hon. MP Cassandra Fernando) அவர்களினால், அன்னாரின் துணைவியார் திருமதி. ரஞ்சி சோமசுந்தரம் அவர்களுக்கு, பல மக்கள் முன்னிலையில் VTCC கற்பகதரு மண்டபத்தில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.





# மாந்தை கிழக்கு செல்வபுரம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டவர் விளக்கமறியலில்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட செல்வபுரம் கிடாய்பிடியத்த குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டதாக நட்டாங்கண்டல் பொலிசாரினால் ஒருவர் கைது செய்யப்படுள்ளார்.

நட்டாங்கண்டல் பொலிசாருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலை அடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட பொலிஸ் குழு குறித்த கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இதேவேளை புதையல் தோண்டுவதாக கிடைத்த தகவல் அறிந்து சென்ற பொலிஸ் குழு சம்பவ இடத்தை சுற்றி வளைத்தபோது நால்வர் தப்பி சென்றதாகவும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கைதான சந்தேக நபர் மாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தர் என போலீசார் தெரிவித்தனர்.

குறித்த கைது நடவடிக்கையின் போது வெளிமாகாண பதிவிலக்கமுடைய கனரக வாகனம் மற்றும் இரு மோட்டர் வண்டிகள் மற்றும் புதையல் தோண்ட பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் பொருட்கள் பொலிசாரால கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள குறித்த சந்தேக நபரை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 19ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# மன்னார் நகர சபை பிரிவில் பண்டிகைக் காலத்தில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு



மன்னாரில் நத்தார், புதுவருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள இம்முறை மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கேள்விப்பத்திர அடிப்படையில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க மன்னார் நகர சபையினால் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வர்த்தகர்களிடம் மன்னார் நகர சபையினால் வியாபார நிலையங்களை பெற்றுக்கொள்ளக் கேள்விப்பத்திர அடிப்படையில் விண்ணப்பம் கோரப்பட்டது.

அதற்கமைவாக வியாபார நிலையங்களைப் பெற்றுக்கொள்ளப் பல நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

வெள்ளிக்கிழமை (16) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில், மன்னார் நகர சபையின் செயலாளர், நகர சபையின் உறுப்பினர்கள், பணியாளர்கள் முன்னிலையில் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு ஒரு வியாபார நிலையத்தை பெற்றுக்கொள்ள ஆகக்கூடிய கேள்வித் தொகைக்கு விண்ணப்பித்த வர்த்தகருக்கு குறித்த வியாபார நிலையம் அமைக்க இடம் வழங்கப்பட்டுள்ளது.



இதன் போது விண்ணப்பித்திருந்த பல நூற்றுக்கணக்கான வர்த்தகர்களும் வருகை தந்திருந்தனர்.

பண்டிகைக் காலத்திற்கான தற்காலிக இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை அமைத்து எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

வியாபார நிலையங்களை பெற்றுக் கொள்ளுவோர் பிரிதொரு நபருக்கு வியாபார நிலைய இடங்களைக் கைமாற்றும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதோடு, குறித்த இடம் நகர சபையினால் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS




Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

இந்தியா செய்திகள்
India News

# திருச்சி "நந்தவனம்" சந்திரசேகரன் பத்திரிகை பணிக்கு பாராட்டு



தமிழ்நாட்டில், திருச்சிராப்பள்ளியின் இலக்கிய அடையாளமாக திகழும் இனிய நந்தவனம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனின் 25 ஆண்டுகால பத்திரிகை பணியைப் பாராட்டி திருச்சிராப்பள்ளி துயவளனார் கல்லூரியில் நடந்த படைப்பிலக்கியப் பயிலரங்கில் பாராட்டுப் பட்டயம் வழங்கப்பட்டது இவ்விழாவில் பேராசிரியர் சுப. விரபாண்டியன் விழாட்பேருரையாற்றினார்.

திருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரி வேர்கள் அறக்கட்டளை. நம்ம திருச்சி இணைந்து நடத்திய இரண்டு நாள் படைப்பிலக்கியப்பயிலரங்கில் விழாப் பேருரையாற்றிய சுப. விர பாண்டியன் பேசியதாவது.

எது இலக்கியம் என்று வரையறுத்துச் சொல்லி விட முடியாது. யார் இலக்கியவாதி என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியாது.

ஒருவர் மருத்துவராக வேண்டுமானால் அதற்கு ஒரு தகுதி இருக்க வேண்டும், பொறியாளராக வேண்டுமானாலும் அதற்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும் அதற்கென்று ஒரு படிப்பு இருக்க வேண்டும்.

இப்படி எல்லாவற்றுக்கும் குறிப்பிட்ட கல்வித்தகுதி இருக்கிறது அல்லது அனுபவத்தகுதி இருக்கிறது ஆனால். ஒருவர் கவிதை, கட்டுரை, கதை எழுதுவதற்கு என்ன படித்திருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

யார் வேண்டுமானாலும் இலக்கியம் படைக்கலாம் அப்படியானால் இலக்கியம் படைப்படு மிக எளிதானதா? என்றால் எளிதுதான் ஆனால், அது தான் கடினமானதும்.

கல்வித் துறையில் ஒரு போட்டிடத்தினால் அதில் படித்த பேராசிரியர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும் ஆனால். கவிதைப் போட்டி நடத்தினால் அதில் எல்லோரும் கலந்துகொள்ள முடியும். இங்கே கவிஞர்களும், கவிதை நூல்களும் மிகுதியாகிவிட்டன கவிதைகள் குறைந்துவிட்டன.

படைப்பு என்றால் கவிதை மட்டுமல்ல சிறுகதை மட்டுமல்ல ஓலியும். சிற்பமும் கூட இலக்கியம்தான் ஒரு சிற்பத்தின் அழகு எங்கே இருக்கிறது என்றால் கிழே விழுந்த கல்லில் இருக்கிறது என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

ஒரு கல்லுக்குள் இருந்து உருவம் வெளிவரவில்லை ஒரு கல்லுக்குள் இருக்கும் உருவத்தின் தேவையற்ற கற்களை அகற்றுவதனாலேயே உருவம் தெரிகிறது கொஞ்சம் கூடுதலாக செதுக்கினாலும், குறைவாக செதுக்கினாலும் சிற்பத்தின் அழுகுக் குறைந்துவிடும் என்று கவிஞர் விளக்கம் தருகிறார் எனவே விழுகின்ற கல்லிருந்து தான் சிற்பத்தின் அழகு தெரிகிறது என்றால் படைப்பிலக்கியமும் அப்படித்தான்.

படைப்பிலக்கியம் என்பது என்ன சொல்லப்படுகிறது எப்படிச் சொல்லப்படுகிறது என்பதுதான் ஒவ்வொரு சொல்லும் எப்படி அடுக்கப்படுகிறது எந்த இடத்தில் அடுக்கட் படுகிறது என்பதும் முக்கியம் என்று குறிப்பிட்டார்.

தூய வளனார் கல்லூரி செயலர் கு. அமல் தலைமையில் நடந்த விழாவில் வேர்கள் அறக்கட்டளைத் தலைவர் எஸ். அடைக்கலராஜா நம்ம திருச்சி ஜெ.டி.ஆர். எழுத்தாளர் கேத்தரின் ஆரோக்கியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழாய்வுத்துறைத் தலைவர் ஞா. பெஸ்கி அறிமுகவுரையாற்றினார்.

மாணவர்கள் எழுதிய விதை நெல் 2022 தொகுப்பு நூலை கல்லூரி முதல்வர் ம. ஆரோக்கியசாமி சேவியர் வெளியிட்டு பாராட்டுரை வழங்கினார்.

திருச்சிராப்பள்ளியில் பத்திரிகைத்துறையில் சிறப்பாக பணியாற்றிவரும் ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு, நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோருக்கு பாராட்டுச் செய்யப்பட்டது.

முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ் அனைவரையும் வரவேற்க முனைவர் டேவில்சன் நன்றி கூறினார். முனைவர் ஜா. சலேத் பயிலரங்கை ஒருங்கினைத்தார்.

படம் - இடமிருந்து வலமாக எழுத்தாளர் கேத்தரீன் ஆரோக்கியசாமி. செயலர் அருள்முனைவர் கு. அமல். நந்தவனம் சந்திரசேகரன். கல்லூரி முதல்வர் ம.ஆரோக்கியசாமி சேவியர், பேராசிரியர் சுப. விர பாண்டியன்.

# இந்தியாவின் பீகாரில் திறப்பு விழாவுக்கு முன்பே பாலம் இடிந்து விழுந்தது



இந்தியாவின் பீகார், பெகுசாய் பகுதியில் உள்ள பாலம் திறப்பு விழாவுக்கு முன்பே இடிந்து விழுந்துள்ளது.

பீகார் மாநிலம் பெகுசாய் பகுதியில் உள்ள பாலம் திறப்பு விழாவுக்கு முன்பே இடிந்து விழுந்துள்ளது. கந்தக் நதியின் குறுக்கே ரூ.13 கோடி செலவில், 206 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ள பாலம் டிச 18 காலை இடிந்து விழுந்தது. கடந்த 2016ம் ஆண்டு பாலம் கட்டும் பணி துவங்கி, 2017ல் முடிவடைந்தது. ஆனால், அணுகுசாலை (சர்வீஸ் ரோடு) இல்லாததால், பாலத்தில் போக்குவரத்து தொடங்கவில்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் பெண்களுக்கான உரிமைகள் எதிர்வரும் தேர்தல்களில் உறுதிப்படுத்த வேண்டும்



பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் அகற்றி பெண்களின் சமமான அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுக்கெப்படும் "ஜனனி" டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் செவ்வாய்க்கிழமை (20) மாலை மூன்றாம் கட்ட நிகழ்வின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் அங்கு கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்ததாவது, இலங்கையில் செயல்வலுவிலுள்ள சட்டதிற்கமைய பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான சந்தர்ப்பம் மற்றும் உரிமைகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நடைமுறையில் இல்லை. பெண்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக தற்போது வரை ஆக்கப்பட்டுள்ளனர் என்பதே எமது கருத்தாகும். சமூகத்தினுள் ஆணாதிக்க சிந்தனை மற்றும் தீர்மானங்களுக்கிடையில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய இடம் கிடைப்பதில்லை. ஆதலால் அரசியல் அடிப்படையில் பெண்களை வலுவூட்டல், உள்ளூராதிகார சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம், உள்ளூராதிகார சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அது தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் முகவர்கள், பெண் தொழிற்படுனர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தற்போது கூட கபே அமைப்பு உள்ளிட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் தேர்தல் ஆணைக்குழு ஒன்றிணைந்து பெண்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதோடு மாவட்ட மட்டத்தில் அதவாது அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களூடாக தேர்தல்கள் செயன்முறைகள் சனநாயகம் சர்வஜன வாக்குரிமை மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம் தொடர்பாகவும் பெண்களின் அரசியல் பங்கேற்பு தொடர்பாகவும் பெண்களை அறிவுறுத்தும் செயலமர்வுகள் நாடு தழுவிய அடிப்படையில் நடாத்தப்படுகின்றன.

இருந்த போதிலும் சகல தரப்பினரும் பெண்களின் உரிமைகளை மதித்து செயற்படுத்த முன்வருவதுடன் உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்துக்காக பெண்களுக்காக 25% ஒதுக்கீடு (Quota) அறிமுகம் செய்தல் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினைகள் எதிர்வரும் காலங்களில் தீர்வு காணப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

மேலும் பெண் தலைமைகளுக்கான டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூன்றாம் கட்ட செயலமர்வில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ். எல்.அப்துல் அஸீஸ் இணைப்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேசிய நிறைவேற்று பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் வளவாலராக ஜனநாயக மறு சீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கை நெறிக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கலந்து கொண்டிருந்ததுடன் பெண் தலைமைகள் மேடைப்பேச்சுக்களையும், ஊடக அறிக்கையிடல்களையும் எவ்வாறு மேற்கொள்ளுதல் என்பது தொடர்பாகவும், தேர்தல் பிரச்சார நிதி சட்டம், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை பயன்படுத்தும் விதம் மற்றும் தகவல் அறியும் சட்டம் தொடர்பாக விளக்கமளித்தார்.



நிகழ்வின் இறுதியில் இதில் கலந்து கொண்ட பெண் தலைமைகளினால் ஊடகங்களுக்கு அறிக்கையிடும் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர் மீதான தாக்குதல் – இருவர் விளக்கமறியலில்!

முல்லைதீவு மாவட்டம் முறிகண்டி பகுதியில் கடந்த 12ம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச சபை சுகாதார பணியாளர் மீதான வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் 20-12-2022 மாங்குளம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12ம் திகதி அன்று முல்லைத்தீவு முறுகண்டி பகுதியில் கடமையில் இருந்த பிரதேச சபை சாரதி ஒருவர் மீது குறிப்பிட்ட சிலவர் வாள்வெட்டு தாக்குதலை நடாத்தியிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள ஒலுமடு உப அலுவலகத்தில் பணியாற்றும் உழவு இயந்திரத்தின் சாரதியான 32 அகவையுடை மந்துவில் பகுதியை சேர்ந்த அன்ரன் பரமதாஸ் துசான் என்ற ஊழியரே வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி மாங்குளம் பிரதேச வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை குறித்த தாக்குதலை கண்டித்து கடந்த 13ம் திகதியன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மாங்குளம் போலீசார் சம்பவத்துடன் தொடர்புடைய கோணாவில் யூனியன்குளம் பகுதியை சேர்ந்த 23 வயது குடும்பஸ்தர் ஒருவரையும், கிளிநொச்சி திருநகர் பகுதியை சேர்ந்த 27 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரையும் நேற்றைய தினம் கைது செய்திருந்தனர், இதேவேளை தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வாள் ஒன்றினையும் கைப்பற்றி இருந்தனர்.

இதேவேளை கைதாகிய இருவரையும் புதன்கிழமை (21-12-2022) மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 02ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் பணித்துள்ளது.

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**ரொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

### துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு
## விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் ரொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS" V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**


உ
சிவமயம்

**ராமநாத இந்துமத கிரியாபீடம்**

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்

**வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்**

**647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் நானாட்டானில் வயோதிப தம்பதியை தாக்கி பணம் நகை கொள்ளை



மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியை தாக்கி 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 30 பவுனுக்கு மேற்பட்ட தங்க நகைகள் கொள்ளை இடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை (16) அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியினரின் வீட்டினுல் வெள்ளிக்கிழமை (16) அதிகாலை உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் கூரை ஓடுகளை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

மூன்று கொள்ளையர்கள் வீட்டினுள் நுழைந்த நிலையில் ஆயுதங்களால் தம்பதியினர் இரு வரை சரமாரியாக தாக்கி பணம் மற்றும் தாலிக்கொடி உட்பட 30 பவுனுக்கு மேற்பட்ட நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார், முருங்கன், பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவினர் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டு பார்வையிட்ட பின் முருங்கன் பொலிஸார் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



குறித்த வீட்டில் சில வருடங்களுக்கு முன்பும் பாரிய திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள ரோஹிங்கிய அகதிகள் 105 பேருக்கு சுமார் 19 லட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய பொருட்களை வழங்கிய மன்னார் மெசிடோ நிறுவனம்



இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் பழுதடைந்த படகில் தத்தளித்த நிலையில் கடற் படையினரால் மீட்கப்பட்ட ரோஹிங்கிய முஸ்லிம்கள் அகதிகள் 105 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) செவ்வாய்க்கிழமை (20) மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று வழங்கி வைத்தனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை (20) மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு சென்று சுமார் 19 லட்சம் ரூபாய் பெறுமதியான ஆண்கள், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள், சுகாதார பொருட்கள், உணவுகள் உள்ளடங்களான பொருட்களை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் மேற்பார்வையில் வழங்கி வைத்தனர்.

யாழ் சிறைச்சாலையில் இருந்து மிரிஹான வில் உள்ள குடிவரவு தடுப்பு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள நிலையில் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் இவ்வாறு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது.

பர்மாவில் இருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்டவிரோதமாக பயணித்தபோது நடுக்கடலில் படகு பழுதடைந்து 3 வாரங்களாக நடுக்கடலில் தத்தளித்த போது இலங்கை கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை காப்பாற்றப்பட்டனர்.




இந்நிலையில் படகில் பயணித்த 105 பேரில் 104 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட அதேநேரம் படகு உரிமையாளர் எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.




Dr. புஷ்பா வன்னித்தம்பி

பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates

Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**

1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

416-289-7187

**Markham**

7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# ஓய்வு பெற உள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண் தான் பேராயர் பதவியிலிருந்து ஓய்வு பெறத் தயாராக இருப்பதாக, பரிசுத்த பாப்பரசருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஒரு பேராயர் 75 வயதை எட்டிய பிறகு பதவி விலகுவதாக அறிவிப்பது வழக்கம்.

அதன்படி, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண் இது குறித்து திருத்தந்தையிடம் அறிவித்துள்ளார்.

அத்தகைய அறிவிப்புக்குப் பிறகு, பேராயரை அந்தப் பதவியில் வைத்திருப்பதா இல்லையா என்பது புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தீர்மானிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் அடிப்படை நிதி தரவுகள் மற்றும் வியாபார பதிவு தொடர்பான பயிற்சிப்பட்டறை!





பெரண்டினா நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளில் இளையோர் அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது.

அதனடிப்படையில் குறித்தி திட்டத்தின் கீழ் தையல், மின் இணைப்பாளர், அலுமினிய பிற்றிங், ஒட்டுவேலை, கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு உற்பத்தி முயற்சிகளின் கீழ் பயனாளிகளுக்கு பயிற்சியுடனான வாழ்வாதார உதவியினை வழங்கியிருந்தது.

பெரண்டினா நிறுவனம் 70 வீதமும், பயனாளிகள் 30 வீதமான பணத்தொகையில் குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிலையில், குறித்த சிறுதொழில் முயற்சியாளர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கில் வியாபார பதிவு மற்றும் அடிப்படை நிதி தரவுகள் பதிவு தொடர்பான பயிற்சிப்பட்டறை புதன்கிழமை (21) காலை 9.00 மணிக்கு மாவட்ட செயலக முல்லைமணி பயிற்சி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் வளாவாளர்களாக மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் முயற்சியான்மை அபிவிருத்தி உத்தியோகத்தர் உ.தேவமலர் மற்றும் பெரண்டினா நிறுவன உத்தியோகத்தர் அரவிந் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த பயிற்சிப்பட்டறையில் 31 சிறுதொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் கதைக்க கூடாது



## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் எச்சரிக்கை

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் எங்கும் கதைக்க கூடாது. கண்துடைப்புக்காக மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி அலுவலகத்தை உடனடியாக மன்னாரில் இருந்து அகற்ற வேண்டும். அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒன்றினைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் புதன்கிழமை (21) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இழப்பீடு வழங்குவதாக இவ்வளவு காலமும் நீதி அமைச்சர் கூறி வருகிறார். எங்களுக்கு இந்த இழப்பீடு வேண்டாம் என்று நாங்கள் கூறி வந்தோம். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளும், பிள்ளைகளுமே எமக்கு வேண்டும் என பல வருடங்களாக போராடி வருகின்றோம்.

அரசாங்கத்திடம் பல தடவைகள் கதைத்தும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இழப்பீட்டை வழங்கி எங்களை திசை திருப்ப பார்க்கின்றார்கள்.

இங்கே ஒன்றும் நடக்கவில்லை என்று காட்டும் வகையிலும் ஐ.நாவிற்கு தமது அறிக்கைகளை வழங்க காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு இழப்பீடு வழங்க முயற்சிக்கின்றனர்.

நாங்கள் இழப்பீட்டிற்காக இவ்வளவு காலமும் போராடவில்லை. எமது உறவுகளுக்காகவும், அத்தனை உயிர்களுக்காகவுமே நாங்கள் போராடி வருகிறோம். எமது பிள்ளைகளுக்கம், உறவுகளுக்கும் என்ன நடந்தது என்று முதலில் கூறுங்கள்.

அரசாங்கத்திடம் ஒப்படைத்த பிள்ளைகளையும், உறவுகளையுமே நாங்கள் கேட்கிறோம். அவர்களுக்கு என்ன நடந்தது? என்றே கடந்த 15 வருடங்களாக கேட்டுக் கொண்டு இருக்கின்றோம். எமது உறவுகளை திருப்பி தாருங்கள் என்று கேட்கின்றோம். ஆனால் அதை பற்றி கதைக்கிறார்கள் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் (ஓ.எம்.பி) பற்றி கதைக்கிறார்கள், நஷ்ட ஈடு பற்றி கதைக்கிறார்கள். மரண சான்றிதழ் வழங்குவதாக கூறுகிறார்கள். நாங்கள் எதையும் கேட்கவில்லை.

எனது உறவுகளையும் பிள்ளைகளையுமே கேட்கின்றோம். சுமார் 2200 நாட்களாக மழைக்கும் வெயிலுக்கும் இடையில் நின்று போராடி வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய 148 பேர் இதுவரை மரணித்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நஷ்ட ஈடு தருவதாக கூறுகிறார்கள். நாங்கள் இலங்கை அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே சர்வதேச விசாரணையை கோரி நிற்கின்றோம்.

எங்களுக்கு நஷ்ட ஈடு தர நீதி அமைச்சருக்கு என்ன அருகதை உள்ளது? நீதியமைச்சர் மன்னார் பக்கம் வராமல் இருப்பது அவருக்கு நல்லது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் எங்கும் கதைக்க கூடாது. கண் துடைப்புக்காக மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி அலுவலகத்தை உடனடியாக மன்னாரில் இருந்து அகற்ற வேண்டும். அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒன்றினைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

எங்களினால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றீர்கள்.

சுமார் 2 ஆயிரம் நாட்களாக போராடுகின்ற எமக்கு அதை செய்ய முடியாது என்று நினைக்கிறீர்களா? எனவே இனி வரும் காலங்களில் நஷ்ட ஈடு வழங்குவதாக கூறுவதை நிறுத்துங்கள். என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

# மன்னாரில் புகையிரதம் முன் பாய்ந்து இளம் குடும்பஸ்தர் தற்கொலை — வெளியான காரணம்



கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி வந்த புகையிரதத்தின் முன் குடும்பஸ்தர் ஒருவர் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் திங்கட்கிழமை (19) இரவு மன்னாரில் இடம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் சில விடையங்கள் வெளியாகி உள்ளது.

கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி வந்த புகையிரதத்தின் முன் குடும்பஸ்தர் ஒருவர் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் திங்கட்கிழமை (19) இரவு மன்னாரில் இடம் இடம்பெற்றுள்ளது. இவ் சம்பவம் மன்னார் உயிலங்குளம் பொலிஸ் பிரிவில் மாதோட்டம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் திங்கள்கிழமை (19) இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

புகையிரதத்தின் முன் பாய்ந்து உயிரிழந்தவர் மணற்குளம் தண்ணீர் தாங்கி கிராமத்தைச் சேர்ந்த நல்லதம்பி நகுலேஸ்வரன் (வயது-37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் குறித்த சம்பவத்தின் போது அவர் தலையில் தலைக்கவசம் அணிந்திருந்ததாகவும் அவ்வேளையில் மது போதையில் இருந்து உள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த புகையிரதம் தலைமன்னார் நோக்கி செல்லும் போது அவர் ரயில் பாதையில் உள்ள கட்டையில் பியர் போத்தலுடன் இருந்ததாகவும் இப்பொழுது ரயில் சாரதி அவர் இருந்ததை அவதானித்து ரயில் ஒலியை ஒலிக்கச் செய்தும் ரயில் வேகத்தை குறைத்து வந்து கொண்டிருந்த போது ரயில் அருகில் வந்ததும் ரயிலுக்கு முன் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக் கொண்டதாகவும் பின் இவரின் சடலத்தை உடன் ரயிலில் ஏற்றிக்கொண்டு மன்னார் புகையிரத நிலைய அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு ரயில் சென்றதாகவும் விசாரணை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரனையும் பிரேத பரிசோதனையும் இடம்பெற்றது.

இவ் மரணம் தொடர்பாக மன்னார் மரண விசாரணை அதிகாரி எஸ். ஈ. குமண குமார் மேற்கொண்ட விசாரணையில் இறந்தவரின் மனைவி மற்றும் தாயார் வழங்கிய வாக்குமூலத்தின் தெரிவிக்கப்படுவதாவது, இறந்தவரின் மனைவி மேரி பிரே மணி நகுலேஸ்வரன் (வயது - 29) சாட்சி கூறுகையில் எங்களுக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் தனக்கும் கணவருக்கும் இடையே குடும்ப பிரச்சனையின் காரணமாக நாங்கள் ஏழு எட்டு மாதங்களாக பிரிந்திருப்பதாகவும், இவரின் குடிபோதையினால் தங்கள் குடும்பங்களில் அடிக்கடி பிரச்சனைகள் தலை தூக்குவதும் பொலிசில் முறையீடுகள் செய்வதுமாக இருந்த நிலையிலேயே தாங்கள் பிரிந்து இருந்ததாகவும் தெரிவித்தார்.

அதே நேரத்தில் இறந்தவரின் தாயார் புஸ்பவதி நல்லதம்பி (வயது 57) சாட்சி கூறுகையில், இறந்தவர் தனது மகன் என்றும் அவர் குடும்பத்துடன் பிரிந்து வந்து சில காலமாக என்னுடன் வசித்து வந்ததாகவும் இவர் தனது மனைவியுடன் சேர்ந்து வாழ முற்பட்டு வந்ததாகவும் ஆனால் அது கை கூடாத நிலையில் அவர் விரக்தியுடன் இருந்து வந்ததாகவும் இதனாலேயே அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என சந்தேகம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இறந்தவரின் மனைவி தான் இவருடன் வாழ விரும்பவில்லை என ஏற்கனவே பொலிசாரிடம் தெரிவித்திருந்தமை யாலும் மகன் தன்னுடன் வாழ்ந்தமை யாலும் சடலத்தை தன்னிடம் ஒப்படைக்கும்படி தாய் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சடலத்தை தாயிடம் ஒப்படைக்கும்படி மரண விசாரணை அதிகாரி போலீசாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

**- மன்னார் நிருபர்**

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# வாழ வழியின்றித் தவிக்கும் எல்லையோர தமிழர்கள்

## (கனடா உதயனின் சிறப்பு தொடர் - பாகம்-03)

- யாழ்ப்பாணம் செய்தியாளர் நடராசா லோகதயாளன்



தீவு நாடான இலங்கையில் எதையுமே நேராகச் செய்வது சரிவராது என்பதே யதார்த்தமாக உள்ளது. எளிமையான விஷயங்களை எவ்வளவு குழப்ப முடியுமோ அவ்வளவு குழப்பி மக்களுக்கு சிரமங்களை அளித்து மக்களிற்குத் தீர்வு காண முடியாத நிலையில் நாடு தத்தளிக்கிறது.

சிறிய விஷயங்களில் கூட இலங்கையில் தீர்வை எதிர்நோக்கியிருப்பது பகல் கனவாகவே தொடருகிறது. நேராக மூக்கைத் தொடுவதற்குப் பதிலாக தலையைச்சுற்றித் தொடும் நிலையே பல இடங்களில் காணப்படுகிறது. கட்டுரைகளிற்காகப் பல பகுதிகளிற்கு நேரில் பயணித்த போது இதைக் காண முடிந்தது.

இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக காஞ்சுரமோட்டை கிராமத்தையும் அங்குள்ள மக்கள் சந்திக்கும் சவால்களையும் கூறலாம்.

அங்குள்ள மக்கள் 39 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா நகரை 80 கிலோ மீற்றர் தூரம் பயணித்தே சென்றடையும் நிலையே உள்ளது. இது அந்த கிராமத்தில் மட்டும் அல்ல, அருகிலுள்ள பல கிராமங்களுக்கும் பொருந்தும் என்று அந்த மக்கள் அங்கலாய்த்தனர். சிறிய அலுவல்களிற்கு கூட அருகிலுள்ள நகருக்குச் சென்று வருவதே அவ்வளவு சிரமமானது என்றால், இதர விஷயங்களை பற்றி கூற வேண்டிய அவசியமில்லை.

இந்த கிராமத்தின் மூத்த பிரஜைகளைத் தேடிய சமயம் பொன்னம்பலம் ஜானகி என்ற 68 வயதான 6 பிள்ளைகளின் தாயார் இக்கிராமத்தின் 50 வருட சாட்சியாக உள்ளார் என்பதனை அறிந்து அவரை சந்தித்தேன். கிராமத்து சூழல்கள் குறித்தும் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"எனது கணவரின் பூர்வீக இடமே இதுதான். நான் எனது 17 வயதில் திருமணமாகி இந்த ஊருக்கு வந்து 6 பிள்ளைகளையும் பெற்று வளர்க்குமளவிற்கு இந்த மண்ணே எமக்கு சீவியத்தை தந்த மண். இங்கே ஏற்பட்ட யுத்தமே எமது வாழ்வை மட்டுமல்ல எனது குடும்பத்தையும் சிதைத்து. நான் பெற்ற பிள்ளைகளில் இரு பிள்ளைகளை இந்த மண்ணுக்காக மாவீரர்களாகியும் விட்டனர்".

அவரை சமாதானப்படுத்துவது சவாலாகவே இருந்தது. சோகப் பிழம்பாகக் காட்சியளித்தார் ஜானகி. தமிழ் மண்ணிற்காக அவர் தனது இரு மகன்களை மட்டுமல்ல, தனது கணவரையும் பறிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

"இறுதி யுத்த காலத்தில் ஓடி ஓடிக் களைத்து இறுதியாக இனி ஓடவே இடம் இல்லை என ஓய்ந்த சமயம் முள்ளிவாய்க்கால் பகுதியில் தறப்பாள் கொட்டகையின் கீழ் இருந்த சமயம் எறிகணை வீச்சில் படுகாயமுற்று வைத்திய வசதியின்றி அலைந்து 9 மாதங்களாக படுக்கையில் இருந்து இயலாமலேயே எனது கணவரும் உயிரிழந்து விட்டார்".

காஞ்சுரமோட்டை கிராமத்தின் அவலங்களிற்கு சாட்சியமாக இருக்கும் ஜானகிக்கு அங்கு குடியிருக்க ஒரு வீடு கூட இல்லை. இவ்வளவிற்கு அவர் அந்த கிராமத்துடன் ஐந்து தசாப்தங்களாக தொடர்புபட்டவர். இரு பிள்ளைகளை நாட்டிற்கு அர்ப்பணித்த நிலையில், எஞ்சிய நான்கு பிள்ளைகளுக்கும் திருமணமாகியுள்ளது. தாயை தம்முடன் வந்திருக்குமாறு அவர்கள் வேண்டினாலும், ஜானகி தயங்குகிறார்.

"அவர்களோடு இருந்தால் சோறு தருவார்கள் ஆனால் எனது நிலம் இருக்காது. இந்த மண்ணை காக்க வேண்டும் என்றால் நான் இங்குதான் இருக்க வேண்டும். செலவிற்கு தோட்ட வேலை கிடைத்தால் போவேன் அத்தோடு சமுர்த்தி கொடுப்பனவு மட்டும் கிடைக்கும். இதை வைத்து சீவியம் போகுது. ஒழுங்கான வாழ்விற்கு ஏதும் இல்லை".



இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற கொடூர யுத்தம் பல்லாயிரக்கணக்கானவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துள்ளது என்பதை உள்நாடும் உலகமும் அறியும். ஆனால் அதற்கான பொறுப்புக்கூறலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நியாயமும் வழங்கப்படும் விஷயத்தில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது என்று செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் அழுதவண்ணம் புலம்புகின்றனர்.

போர் எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தினாலும், தமிழ் மக்களிற்கு - அதிலும் குறிப்பாக இன்னும் தமிழர் தாயகப் பகுதியில் வாழ்ந்து வரும் ஜானகியைப் போன்றவர்களுக்கு மண் என்பது தமது உயிரிலும் மேலானதாக உள்ளது.

"இந்தக் காஞ்சுரமோட்டையில் இருந்து 3 தடவை இடம் பெயர்ந்து மீண்டும் மீண்டும் சொந்த மண்ணுக்கே வந்துள்ளேன். எனது உயிரும் இதே காஞ்சுரமோட்டையில்த்தான் போக வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன்".

அவரது குரலில் உறுதிக்கு அப்பாற்பட்டு போர் முடிந்த பிறகு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்பவர்கள் தம்மைப் போன்றவர்களை எப்படி கைவிட்டனர் என்பது குறித்தும் அவர் மிகவும் வருந்தினார். அவர் கூறிய விஷயங்களை மறுக்க இயலவில்லை.

"தமிழ் மக்கள் வாழ வேண்டும், வாழ்ந்தவர்களின் நினைவு வேண்டும், எம்மை காட்டி அரசியல் செய்பவர்களுக்கும் பல நாடுகளில் ட் அடைக்கலமும் கோருபவர்களிற்கு எம்மை திருப்பியும் பார்ப்பதற்கான மனமே கிடையாது. நாம் ஏதோ நாடோடிகள் அல்லது காட்டு வாசிகள் போன்று வாழ்கின்றோம்" என்றவர் அதற்கு மேல் பேச முடியாதவாறு கண் கலங்கி நின்றார்.



காஞ்சுரமோட்டை மக்கள் தமது எந்த தேவைக்கும் வவுனியா நகருக்கே செல்ல வேண்டும். காலையில் சென்றால் மாலை திரும்பும் பேருந்துகள் இரவு 7 மணியை தாண்டியே மருதோடையை அடையும். மருதோடையில் இறங்கி கால் நடையாக வீடு செல்ல இரவு 8 மணியை தொட்டு நிற்கும். இவ்வாறு கால் நடையாக பயணிக்கும் 5 அல்லது 6 கிலோ மீற்றர் பாதையும் பெரும் காடுகளைக் கொண்ட பாதை. பெரிய யானை நின்றாலே தெரியாத பாதையில் கரடி, சிறுத்தை மற்றும் பாம்பு எது இருந்தாலும் ஏறி மிதித்த பின்புதான் தெரியும்.

அதை இரவு நேரத்தில் அங்கு நான் உணர்ந்தேன். அந்தச் சூழல் மிகவும் அச்சமூட்டுவதாக இருக்கிறது. அங்கு வனவிலங்குகள் எந்நேரமும் யாரையும் தாக்கக் கூடும் என்பது யதார்த்தமானது. வனவிலங்கு அபாயத்திலிருந்து தற்காப்பாக இருந்து கொள்வதற்காக மருதோடையில் இருந்து காஞ்சுரமோட்டை வரையும் உள்ள சுமார் 140 மின் கம்பங்களில் வெறும் 10 மின் விளக்குகள் அதாவது அரை மைலிற்கு ஒன்று பொருத்தி தந்தால்கூட இரவு ஒரு அவசரம் என்றால் பயணிக்க முடியும். ஆனால் கண் திறப்பார் யாரும் இல்லை என்கின்றனர். நாடே பல மணி நேர மின்வெட்டால் அவதியுறும் போது, இவர்களின் நிலையை எண்ணிப்பார்க்கவே கவலையாகவுள்ளது.

தற்போது காஞ்சுரமோட்டையில் இருந்து வவுனியாவிற்கு பயணிக்க 80 கிலோ மீற்றர்தூர பாதையினையே அவர்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனாலும் மருதோடையில் இருந்து வெடிவைத்தகல் கிராமத்தின் ஊடாக சேமமடு வழியாக வவுனியா நகரை அடையவும் ஓர் வீதியும் உண்டு. இந்த வழியாகப் பயணித்தால் வவுனியா நகரை வெறும் 39 கிலோ மீற்றரில் சென்றடைய முடியும். ஆனால் போகவே முடியாதவாறு இரு பெரும் தடைகள் அங்கு உள்ளன. முதலாவது அவர்கள் போகும் பாதையை இக்கிராமங்களில் வாழும் மக்கள் தொகையுடன் ஒப்பிட்டு அது குறைவு என்பதனால் 40 கிலோ மீற்றர் பாதைக்கு அதிக நிதியை ஒதுக்க அரசு தயங்குகிறது.

இதேபோன்று இரண்டாவது தடையாக இருப்பது மக்கள் நடமாட்டம் குறைந்தமையினால் இப்பாதையில் பகல் நேரத்திலும் யானைகள் நிற்கின்றன. இவற்றின் காரணமாகச் சேதமடைந்த பாதையால் எந்த வாகனமும் பயணிப்பது கிடையாது. இப்பாதையைச் சீரமைத்தால் தமது கிராமம் மட்டுமன்றி மருதோடை வரை உள்ள கிராமங்களும் நன்மை அடைவது மட்டுமல்லமால் அயலில் உள்ள சிங்கள மக்களும் போய் வாருவார்கள் என்று உள்ளூார்வாசிகள் கூறுகின்றனர். அப்படிச் செய்தால் பொபஸ்வேவாவிற்கான பாதையும் இலகு படுத்தப்படும். அவ்வகையிலாவது அப்பாதை சீரமைக்கப்படுமா என்று மக்கள் ஏங்குகின்றனர்.



இவர்களைக் கடந்து சென்ற சமயம் சுமார் 40 ஆடுகளை மேய்த்துக்கொண்டு ஒரு பெண்மணியைக் கண்ட போது அவரிடம் பேச்சுக்கொடுக்க முயன்றோம். "யார் என்ன கேட்டு எப்படிச் செய்திகள் வந்தாலும் இதுதான் எமது வாழ்வு. அதனால் இதில் நின்று பேசி நான் எனது நேரத்தைக் கடத்தவும் விரும்பவில்லை யாரையும் நம்பவும் தயார் இல்லை" என கூறியவாறே சென்றுகொண்டிருந்தார்.

சுப்பையா விஸ்வநாதன் இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியா சென்று மீண்டும் தாயகம் திரும்பியவர். அவருக்கு வயது 48. எதிர்பார்ப்புகளுடன் நாடு திரும்பினாலும் ஏமாற்றமே மிஞ்சுகிறது என்கிறார் விஸ்வநாதன்.

"1990ஆம் ஆண்டு இங்கிருந்து இரண்டாவது தடவை இடம்பெயர்ந்த சமயம் இந்தியாவிற்கு தப்பிச் சென்றேன் அங்கேயே திருமணமும் செய்தபோதும் 28 ஆண்டுகளும் அகதி என்ற அடைமொழியின் கீழேயே முகாம் வாழ்க்கையில் எந்தவொரு எதிர்காலமும் இன்றி சுதந்திர நடமாட்டமும் இல்லாது வாழ்ந்தோம். எமது நிலை எமது பிள்ளைகளிற்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக என்ன சிரமத்தை எதிர்கொண்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் 2018ஆம் ஆண்டு தாயகம் திரும்பினேன். தாயகம் திரும்பினேன் என்று கூறுவதா அல்லது காட்டுக்கு திரும்பினேன் எனக் கூறுவதா என்று விளங்கவில்லை. அவ்வாறான ஒரு அவல வாழ்வையே வாழ்கின்றோம். எமக்கென்று ஒரு நிலம் உண்டு என நம்பி வந்தோம் இங்கே நிலம் மட்டும்தான் உண்டு வேறு எவையுமே இல்லை. அரைகுறையாக போட்ட வீடு, காட்டின் நடுவே வாழ்க்கை, வெறும் அரை ஏக்கர் நிலமே வாழ்வாதாரம், இத்தனைக்கும் மத்தியில் பொருளாதார சுமை தாங்க முடியவில்லை. பேசாமல் மீண்டும் தமிழகத்திற்கே சென்று விடுவோமா என்ற சிந்தனையே எழுகின்றது".



வாழ்வாதாரத்திற்காகச் சிறு வெதுப்பகத்தை அமைத்தும் பார்த்தார் விஸ்வநாதன். ஆனால் அது சில மாதங்கள்கூட இயங்கவில்லை. அதன் கூரைகள் சேதமடைந்து விட்டன. அதனைச் சீர் செய்ய அவரிடம் பணம் இல்லை. இதனால் மழை நீரில் வெதுப்பக அடுப்பும் அழிவடைந்து விடும் அவலம் காணப்படுகின்றது. இதனால் போட்ட முதலும் கரையுமோ என்ற ஏக்கம் அவரை வாட்டுகிறது. வெதுப்பகத்தை இயக்கினால் உற்பத்தியைச் சந்தைப்படுத்த மோட்டார் சைக்கிள் இல்லையென்றாலும் ஒழுங்கான சைக்கிள் கூட அவரிடம் இல்லை. அப்படியான நெருக்கடியில் எப்படி வாழ்வது என்று கேட்டார்.

அதற்கான பதில் என்னிடமில்லை.

# காணாமல் ஆக்கப்பட்டோரை நீதிமன்றில் முன்னிறுத்த உத்தரவு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**




**கா**ணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றம் மிகவும் முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிறுத்துமாறு வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கின் முதலாவது தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் வெள்ளிக்கிழமை (16) பிறப்பிக்கப்பட்டது.

இதில் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

போர் முடிந்த இறுதி கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் - அதாவது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பல வழக்குகள் விசாரணைக்கு வந்திருந்தன.

அவற்றில் முதல் ஐந்து வழக்குகளின் தீர்ப்பு வெள்ளியன்று வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கின் பூர்வாங்க விசாரணை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று. அதன் பின்னர் நீதவானின் அறிக்கையின் பிரகாரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் எல்லா மனுதாரர்களும் தமது சாட்சியங்களை அளித்தனர். பின்னர் இராணுவம் சார்பாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டது.

இதன் போது சாட்சியமளித்த இராணுவ அதிகாரி சரணடைந்தவர்களின் பட்டியல் தங்களிடம் இருப்பதாகக் கூறியிருந்தார். எனினும் அந்த பட்டியலை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்னர் இந்த வழக்கு மேல்நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டு 16ஆம் திகதி முதலாவது வழக்கு தீர்ப்பு வாசிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மனுதாரர் தன்னுடைய கணவர் தனது கண்முன்னாலே தாங்களே சரணடைய வைத்து முகாமில் செய்த அறிவித்தலின்படி - அதாவது சரணடைந்தவர்கள் பாதுகாப்பாக வைக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் - தன்னுடைய கணவரை சரணடையச் செய்து அதன் பின் தன்னுடைய கணவர் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டார் என்றார் என்று முன் வைத்த வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

அந்த மனுதாரரின் கணவர் அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர் இராணுவத்தின் மத்தியில் தான் இருந்தார், அவர்களுடைய கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அதே சமயத்தில் அதனை எதிர்த்த இராணுவ தரப்பினர் அது தொடர்பான திருப்திகரமான பதிலையும் முன்வைக்கவில்லை என்ற ஒரு நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுத்தது.



அதாவது காணா-மல் ஆக்கப்பட்ட நபர் இராணுவத்திடம் சரணடையவில்லை என்றால் அதனை நிரூபிக்கும் பொறுப்பு இராணுவத்திடம் இருந்தது. ஆனால் அந்த பொறுப்பை அவர்கள் தங்களுடைய சாட்சியங்கள் மூலம் சரிவர வில்லை நிரூபிக்கவில்லை என்று நீதிமன்றம் கருதியது.

எனவே மனுதாரரின் வேண்டுகோளின் பிரகாரம் ஆட்கொணர்வு மனுவினுடைய எழுத்தாணையை நீதிமன்றம் அனுமதித்து அடுத்த தவணையான 22.03.2023 அன்று காணாமல் ஆக்கப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

அதே சமயத்தில் இன்னுமொரு வழக்கில் மனுதாரர் போதுமான ஆவணங்களை நீதிமன்றின் முன்னால் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்த மூன்று வழக்குகளும் அடுத்த வருடம் ஜனவரி 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டு அதன் தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077



No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# செல்வா வெற்றிவேல் தலைமையிலான வீடு விற்பனை முகவர் நிறுவனம் Home Life Future Realty Inc Brokerage நிறுவனத்தின் விருது விழா







*(முன் பக்கத் தொடர்ச்சி)*

இவ்வருடத்திற்குரிய அதியுயர் விற்பனை விருதை திருமதி அபி அமல் பெற்றுக்கொண்டார் அவரைக் கௌரவித்த போது அவரது கணவரும் மேடைக்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றார்.
இவ்வருடத்திற்குரி அடுத்த நிலை சிறப்பு விருதுகளை திருவாளர்கள் செல்வா சண்முகநாதன். ஜோய் செல்வநாயகம். கைலன் தில்லநாதன், கிறிஸ் சிவபாதம் உட்பட பல பெற்றுக்கொண்டனர். அவர்களுக்குரிய விருதுகள் மேடையில் செல்வா வெற்றிவேல் அவர்களால் வழங்கப்பெற்றன.

அத்துடன் இவ்வருடன் இரண்டு மனித நேய உதவிகள் வழங்கப்பெற்றன.
ஸ்ரோவில் வைத்தியசாலைக்கு 17000 டாலர்களுக்கு சற்று அதிக தொகைக்கு நிதி அன்பளிப்பு வழங்கப்பெற்றது. இந்த நிதி சேகரிப்பில் திருவாளர்கள் செல்வா சண்முகநாதன். ஜோய் செல்வநாயகம். கைலன் தில்லநாதன் முக்கிய பங்கு வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
அத்துடன் தாயகத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களில் உலர் உணவு வழங்கும் திட்டத்திற்காகவும் பத்தாயிரம் டாலர்கள் சேகரித்து வழங்கப்பெற்றன.



# பேச்சுவார்த்தைக்கான நிபுணர் குழு?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**பே**ச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன் பதினோராம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்ப்பாணம் ராஜா க்ரீம் ஹவுஸ் மண்டபத்தில் ஒரு சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. மன்னாரைச் சேர்ந்த தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கமானது மேற்படி சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அழைக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்திற்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான உறவு சுமூகமானது அல்ல. தமிழ் தேசிய மக்கள் முன்னணியை இது போன்ற ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்குள் உள்ளே கொண்டு வரக்கூடிய ஒரே சிவில் அமைப்பாக தமிழ் சிவில் சமூக அமையும்தான் காணப்படுகிறது. எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அந்த சந்திப்பில் அழைப்பு விடுக்கப்படவில்லை.

மேலும், சந்திப்புக்கு அழைக்கப்பட்ட கட்சிகளிலும் சிலர் பங்குபற்ற வில்லை. புளொட் இயக்கத்தின் தலைவரும் டெலோ இயக்கத்தின் தலைவரும் அங்கு வந்திருக்கவில்லை. புளொட் இயக்கம் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரை அனுப்பியிருந்தது. சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் வந்திருக்கவில்லை. சுமந்திரன் வந்திருந்தார். மாவை சேனாதிராஜா வந்திருந்தார். விக்னேஸ்வரன் வரவில்லை அருந்தவபாலனை அனுப்பி இருந்தார். சுரேஷ் பிரேமசந்திரன் ஐங்கரன்நேசன் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வந்திருந்தார்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறை தலைவரும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் தமிழ் பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளை எழுதுபவர்களும் அங்கே வந்திருந்தார்கள்.

மேற்படி சந்திப்பின் நோக்கம் பேச்சு வார்த்தைகளை இலக்காகக் கொண்டு ஒரு நிபுணர் குழுவை உருவாக்குவது ஆகும்.

பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும், அக்கட்டமைப்பானது கட்சிகளில் மட்டும் தங்கியிராமல் கட்சிகளுக்கு வெளியே புதுஜீவிகள், கருத்துருவாக்கிகள், சமூகப் பெரியார்கள், சமயப் பெரியார்கள், செயற்பாட்டாளர்கள் போன்ற பல தரப்புகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. சந்திப்பின் முடிவில் அவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் தொடங்கிய பின் அவற்றின் அடுத்தடுத்த கட்ட நகர்வை பொறுத்து அக்கட்டமைப்பு எவ்வாறு அமையும் என்பது தீர்மானிக்கப்படக் கூடும். அல்லது சில சமயம் கட்சிகள் வழமை போல குழப்பிக் கொண்டு தாங்கள் நினைத்தபடி தனி ஓட்டம் ஓடவும் கூடும்.

கட்சிகளோ அல்லது கட்சி பிரமுகர்களோ தனி ஓட்டம் ஓடுவதை தடுப்பது மேற்படி சந்திப்பின் உள்நோக்கம் ஆகும். தமிழ் மக்கள் ஒரு தரப்பு என்ற அடிப்படையில் ஒரு தேசம் என்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டும் என்றும், எனவே ஒரு தேசத்துக்குரிய கட்டுமானம் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை திட்டமிடவும் ஒழுங்குபடுத்தவும் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அக்கருத்தை அங்கு கூடியிருந்த பெரும்பாலான அரசியல்வாதிகள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். எனினும் இக்கட்டுரை எழுதப்படும் வரையிலும் அவ்வாறான கட்டமைப்பு எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த புதன்கிழமை கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேச இருந்தார்கள். அதன்பின் சில சமயம் இப்படி ஒரு கட்டமைப்பைக் குறித்து தீவிரமாக யோசிக்கப்படக்கூடும். அல்லது கைவிடப்படவும் கூடும்.

அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று சிந்திப்பதன் பொருள், தமிழ் தரப்பு இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகளை சீரியஸ் ஆக எடுத்துக் கொள்கிறது என்பது அல்ல. சுமந்திரன் கூறுவது போல ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களையும் வெளிநாடுகளையும் ஏமாற்றுவதற்காக ஒரு பட்டத்தை வானில் விட முயற்சிக்கிறார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் பட்டம் விடுகிறாரோ இல்லையோ தமிழ் மக்கள் அதற்காக அண்ணாந்து பார்த்து கொட்டாவி விட்டுக் கொண்டிருக்க தேவையில்லை. ரணில் வருவார் போவார் அவரைப் போல எத்தனையோ தலைவர்கள் கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதும் வந்து போய்விட்டார்கள். ஆனால் எல்லாத் தலைவர்களும் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள். எனவே அந்த ஒரு நூற்றாண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் சிங்கள தலைவர்களை எதிர்கொள்ளவும், அவர்கள் விரிக்கும் சூழ்ச்சி வலைகளை அறுத்து எறியவும், அவற்றை அனைத்துலகத்திற்கு அம்பலப்படுத்தவும் தமிழ் மக்களிடம் ஒரு கட்டமைப்பு இருக்க வேண்டும். ஒரு தேசம் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் அதற்குரிய கட்டமைப்பை கொண்டிருக்க வேண்டும். சிங்கள தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு விசுவாசமாக இருக்கலாம், இல்லாமல் விடலாம்.
ஆனால் தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு தாங்கள் பேச்சுவார்த்தைக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதனை நிரூபிக்கும் விதத்தில் ஒரு கட்டமைப்பை வைத்திருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளும் நிரந்தரமானவர்கள் அல்ல. இன்றைக்கு இருக்கும் மக்கள் பிரதிநிதி நாளை இல்லாமல் போகலாம்.
ஆனால் ஒரு தேசமாக தமிழ் மக்கள் தொடர்ந்து இருக்கிறார்கள், இருக்கவும் வேண்டும். எனவே ஒரு தேசம் என்ற அடிப்படையில் இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒரு கட்டமைப்பு இருக்க வேண்டும். அது அரசியல்வாதிகளில் தங்கியிராமல் சுயாதீனமாக இயங்கும் ஒரு கட்டமைப்பாகவும் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் கடந்த 11ஆம் தேதி மேற்படி சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

தமிழ் மக்கள் ஓர் அரசுடைய தரப்பு அல்ல. ஓர் அரசற்ற தரப்பாக இருப்பதனால் தமிழ் மக்களுக்கு ஐநா போன்ற உலகப் பொது மன்றங்களிலும் உரிய அங்கீகாரம் இல்லை. அது மட்டுமல்ல இந்தியா சீனா அமெரிக்கா போன்ற பேரரசுகளும் கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் எப்பொழுதும் கையாளப் பார்க்கும். அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் அணுகுமுறை அத்தகையதுதான்.

அண்மையில்கூட இந்திய நாடாளுமன்றத்தில் தமிழக அரசியல்வாதியான வை.கோபாலசாமி ஒரு கேள்வியை எழுப்பிய பொழுது இந்திய வெளியுறவு அமைச்சர் வழங்கிய பதிலில் அதை காணலாம். பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் ஒரு இனத்துக்கு என்று வழங்கப்படவில்லை, இலங்கைக்கு பொதுவாகவே வழங்கப்பட்டன என்று அவர் கூறுகிறார். ஏனென்றால் இலங்கையை இந்தியா கொழும்புக்கு ஊடாகத்தான் அணுகுகின்றது. கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் இந்தியா கையாள முயற்சிக்கும். கொழும்பில் உள்ள அரசாங்கம் இந்தியாவின் வழிக்கு வரவில்லை என்றால், தமிழ் மக்களை ஒரு கருவியாக பயன்படுத்தி, கொழும்பைப் பணிய வைப்பார்கள். அதுதான் இந்திய - இலங்கை உடன்படிக்கை. எனவே ஓர் அரற்ற தரப்பாக இருப்பதனால் தமிழ் மக்களிடம் ஒரு தேசமாக இருப்பதற்கு தேவையான கட்டுமானங்கள் அநேகமாக இல்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு கருநிலை அரசை நிர்வகித்த பொழுது அவர்கள் ஒரு தொகுதி கட்டமைப்புகளை உருவாக்கினார்கள். ஆனால் 2009க்கு பின் அவ்வாறான கட்டமைப்புகள் எவையும் தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது.

உதாரணமாக வெளிநாடுகளை அணுகுவதற்கு ஒரு வெளியுறவுக் கொள்கை வேண்டும். வெளியுறவுக் கொள்கையை வகுப்பதற்கு ஒரு சிந்தனைக் குழாம் வேண்டும். வகுக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கையை அமல்படுத்துவதற்கு நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு வெளியுறவுக் கொமிட்டி வேண்டும். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக அப்படிப்பட்ட கட்டமைப்புகள் எவையும் தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது. ஏனென்றால் தமிழ் கட்சிகள் தேச நிர்மாணம் என்ற அடிப்படையில் சிந்திக்கவில்லை. தேசத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக சேர்த்துக்கட்டும் அம்சங்களை பலப்படுத்தும் விதத்தில் கட்டமைப்புகளை உருவாக்குவதுதான். கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் கட்சிகள் ராஜதந்திரிகளோடும் வெளிநாடுகளோடும் அனைத்துலக நிறுவனங்களோடும் இடையூடாடி வருகின்றன. ஆனால் அவ்வாறான ராஜிய இடையூடாட்டங்களுக்கு பொருத்தமான கட்டமைப்புகள் எவையும் எந்த ஒரு கட்சியிடமும் இல்லை. அரங்கில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளும் தனி நபர்களின் ஆங்கிலப் புலமை, ராஜதந்திரப் புலமை என்பவற்றில்தான் தங்கியிருக்கின்றன. ஆனால் வெளியுறவு நடவடிக்கைகள் எனப்படுகின்றவை அதற்கு பொருத்தமான நிபுணர்களைக் கொண்ட கட்டமைப்புக்களால் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட கட்டமைப்புகள் எவையும் தமிழ் கட்சிகளிடம் கிடையாது.

இக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட ராஜா கிரீம் கவுஸ் சந்திப்புக்கூட பேச்சுவார்த்தைகளுக்கு மூன்று நாட்களுக்கு முன் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சந்திப்புத்தான். ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தைகளுக்கு விசுவாசமாக இருக்கிறாரா இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சனை, தமிழ்த் தரப்பு பேச்சுவார்த்தை என்று வரும்பொழுது கொழும்பையும் அனைத்துலக சமூகத்தையும் எதிர்கொள்வதற்கு வேண்டிய தயாரிப்புகளோடு இருக்கிறதா இல்லையா என்பதே இங்கு பிரச்சனை. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால் ஒரு தேசம் என்ற அடிப்படையில் அதற்கு தேவையான வெளியுறவு கட்டமைப்பைத் தமிழ் தரப்பு கொண்டிருக்கிறதா இல்லையா என்பதே இங்கு கேள்வி.

தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மக்கள் இயக்கங்கள் கிடையாது. இருப்பவை எல்லாம் தேர்தல் மையக் கட்சிகள்தான். எனவே இந்த கட்சிகள் பேச்சுவார்த்தை மூலம்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வை அடைய முடியும். பேச்சுவார்த்தைகள் அல்லாத வேறு எந்த வழிமுறைகளும் அவர்களிடம் இருப்பதாக தெரியவில்லை. அப்படிப்பட்ட வழிமுறைகளுக்கு தேவையான கட்டமைப்புகளையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் அனைத்துலக நிறுவனங்களையும் வெற்றிகரமாகக் கையாள்வதற்கு தேவையான நிறுவனமயப்பட்ட சிந்தனை எதுவும் தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது.

அப்படிப்பட்ட ஒரு வெற்றிடத்தில்தான் கடந்த வாரம் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு சரியாக மூன்று நாட்களுக்கு முன் ஒரு கூட்டத்தைக் கூட்டி ஒரு கட்டமைப்பற்றி சிந்திக்கும் அளவுக்கு நிலைமை காணப்படுகிறது. ஆனால் வெளியுறவுக் கட்டமைப்பு அல்லது பேச்சுவார்த்தைக்கான நிபுணர் குழு போன்றவை திடீர் ரசத்தைப் போல திடீர் தோசையைப் போல உடனடியாக செய்யக்கூடியவை அல்ல.தங்களை மெத்தப் படித்த மேதைகளாகக் கருதி ஏனைய இனங்களை “மோடையாக்கள்” என்று அழைக்கும் ஈழத் தமிழர்கள் ஒரு நூற்றாண்டு கால படிப்பினைகளின் பின்னரும் பேச்சுவார்த்தைக்கு மூன்று நாட்களுக்கு முன்னுக்குத்தான் ஒரு நிபுணர் குழுவைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

# National Ethnic Press and Media Council of Canada hosted its Annual Christmas Celebrations and Awards Gala in Toronto

# கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம்













கடந்த 16-12-2022 அன்று வெள்ளிக்கிழமை மாலை கனடாவில் இயங்கிவரும் பல்லின பத்திரிகையாளர்கள் கழகம் நடத்திய வருடாந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம் ஆகியவை அடங்கிய அடக்கமான வைபவத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு சேவையாற்றியவர்கள் என்ற வகையில் யுகம் வானொலி நிறுவனத்தின் அதிபர் 'கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்' அவர்களுக்கும் வர்த்தகப் பிரமுகரும் கணக்காளரும் சமூக சேவையாளருமான சாந்தகுமார் தம்பியப்பா அவர்களுக்கும் சமூக சேவைக்கான சிறப்பு விருதுகள் வழங்கப்பெற்றன.

அத்துடன் படைப்பிலக்கியத்துறையில் 50 வருடங்களைக் கடந்தும் பத்திரிகைத் துறையில் முப்பது வருடங்களைக் கடந்தும் பணியாற்றுவதோடு கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவராகவும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருபவர் என்ற வகையில் 'உதயன்' ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சிறப்பு விருதும் வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படங்களில் விருதுகளைப் பெற்று மகிழ்ந்த 3 வெற்றியாளர்களும் நண்பர்கள் மற்றும் சக ஊடகவியலாளர்கள் மற்றும் கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைவர் திரு தோமஸ் சாரஸ் மற்றும் 'உலகத் தமிழர்" பத்திரிகையின் ஆசிரியர் திரு கமல்வாசன் ஆகியோர் சூழ்ந்திருக்க எடுக்கப்பெறற படங்கள் இங்கு காணப்படுகின்றன. இந்த விழாவில் யுகம் வானொலி நிறுவனத்தைச் சேர்ந்த பல ஒலிபரப்பாளர்கள் மற்றும் நேயர்கள் மற்றும் உதயன் பத்திரிகை குழுமத்தைச் சேர்ந்தவர்கள் என தமிழ் பேசும் அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.




2019
2020
2021
2022
TOP PRODUCER
TOP PRODUCER AWARD WINNERS FOR LAST 4 YEARS
எமது தொடர் வெற்றியின் பங்காளிகளான வாடிக்கையளர்களுக்கும் நண்பர்களுக்கும்
நத்தார் வாழ்த்துக்களும் நன்றிகளும்
TOP PR
# 2
SALES REPRESENTATIVE
IN CANADA
FOUNDER'S CLUB
MEMBER
Abi Amalan
Real Estate Broker
416.732.1810
Amal Ganeshamoorthy
Broker of Record
416.829.9993
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE | HOMELIFE FUTURE AMAL-ABI REALTY INC., BROKERAGE
(905) 201-9977 | 7 Eastvale Dr #205, Markham, ON L3S 4N8

# Merry Christmas
AND HAPPY NEW YEAR!

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு இரண்டுமே, கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கவும், சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அந்த அனுபவங்களிலிருந்து பபலவற்றைக் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறன.

தைரியம், நம்பிக்கை மற்றும் தீவிர முயற்சியுடன், நீங்கள் விரும்பும் அனைத்தையும் அடையவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஆரோக்கியமானதும் வளமானதுமான கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன். உங்கள் கனவுகள் அனைத்தும் நனவாகும் என்றும் நம்புகிறேன்.

## 2023 ம் ஆண்டை நாம் அனைவரும் வரவேற்போம்



ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

# மரண அறிவித்தல்

மலர்வு: 22 - 03 - 1978



உதிர்வு: 12 - 12 - 2022

யாழ்ப்பாணம் பாலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் கடோள்கசன் (கஜன்) 12-12-2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

இவர் திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ராஜினிதேவி (தும்பளை பருத்தித்துறை) அவர்களின் பாசமிகு கணவரும், திரு. திருமதி அழகதுரை தம்பதிகளின் மருமகனும், தனபாலு (இலங்கை), காண்டீபன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அபிமன்யு, மாலா ஆகியோரின் சகோதரனும், சாந்தினிதேவி (இலங்கை), விஜயாதேவி (கனடா), சிவாஸ்கரன் (கனடா). துஷாந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chaper Ridge Funeral Home (8911 Woodbine Avenue, Markham ON L3R 5G1) ல் 28-12-2022 புதன்கிழமை பி.ப 5:00 மணி தொடக்கம் 7:00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு 29-12-2022 வியாழக்கிழமை பி.ப 12.00 மணி தொடக்கம் 2:00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
திவா - 647 608 9394
துக்ஷாந்தன் - 647 779 7268

## திரு. சுப்பிரமணியம் கடோள்கசன் (கஜன்)

(பாலாலி தெற்கு, வசாவிளான்)

தகவல்: குடும்பத்தினர்

# 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 09-04-1928

விண்ணில்: 03-01-2014



## அமரர். அற்புதம்மா சந்தியாப்பிள்ளை

எட்டாண்டுகள் உருண்டு மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறையவில்லை அம்மா!
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒழியவில்லை அம்மா!
ஆண்டுகள் மறைந்தாலும் ஆறவில்லை அம்மா எங்களின் துயரம்
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்றது
உங்களின் ஆயுள் கணக்கை மாற்றி போட்டிருக்கலாம்
இறைவன் மனமிரங்க மறுத்தாரோ...
இவ்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென விண்ணுலகில்
வாழ்ந்திட நீங்கள் விரைந்துதான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள் நினைவே எங்கள்
மனதெல்லாம் அம்மா...
தங்களின் ஆத்மா சாந்தி பெற்று எல்லாம் வல்ல இறைவனிடம்
சேர சிந்தை வேண்டி வணங்குகின்றோம் அம்மா.....

என்றும் உங்கள் நினைவுடன் வாழும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல்: உதயன் (மகன்)
(416) 843-0589

# அன்று (டிச 23,1964) கடல் விழுங்கிய தனுஷ்கோடி; இன்று எஞ்சிய நிலப்பரப்பும் தொடர்ந்து விழுங்கப்படுகிறது



ராமேசுவரம்.. தென் இந்தியாவின் புனிதமான தீவு நகரமாகப் போற்றப்படுகிறது. இந்த நகரத்தை விடவும் பிரபலமாக அதன் அருகிலேயே இருந்த மற்றொரு நகரம் தான் தனுஷ்கோடி.

இன்று சிதைந்து போய் ஆங்காங்கே வெறும் இடிபாடுகளுடன் காட்சி அளிக்கும் தனுஷ்கோடியின் கடந்த காலம் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது. அது பரப்பளவில் பெரிதாக இல்லாவிட்டாலும் வர்த்தக நகரமாக விளங்கியது. ஒரு வால் போன்று நீளவாக்கில் அதன் நிலப்பரப்பு அமைந்திருந்தது.

இலங்கையுடன் நெருங்கிய வர்த்தகத்தொடர்பு கொண்டு இருந்ததுடன் மீனவர்களும் அங்கு தங்கி மீன் பிடித்து வந்தனர். சுமார் 5 ஆயிரம் பேர் வரை வசித்து வந்த தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையே சிறிய கப்பல்கள் கூட ஓடிக்கொண்டு இருந்தன.

போட் மெயில்

சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் "போட் மெயில்" என்ற ரெயில் தனுஷ்கோடி வரை வரும். அதில் கொழும்பு செல்லும் பயணிகள் கூட வருவார்கள். அவர்கள் தனுஷ்கோடியில் இறக்கி விடப்படுவார்கள்.



அங்கு தயாராக நிற்கும் படகில் அவர்கள் ஏற்றி விடப்படுவார்கள். அந்த படகு 21 கி.மீ. தொலைவில் உள்ள தலைமன்னார் சென்று அவர்களை இறக்கி விடும். அங்கு தயாராக காத்திருக்கும் மற்றொரு ரெயிலில் ஏறி அவர்கள் கொழும்பு வரை செல்லமுடியும். ரெயிலும், படகுமாக இணைந்த பயணம் என்பதால் அதற்கு "போட் மெயில்" எனப்பெயரிடப்பட்டு இருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சி அறிமுகப்படுத்திய இந்த ரெயில் சேவை 1964 வரை சிறப்பாக இயங்கி வந்தது.

இவ்வளவு பிரசித்தி பெற்றிருந்த தனுஷ்கோடி, 58 ஆண்டுகளுக்கு முன், புயல் வீசியதால் கடல் சீறி எழுந்து விழுங்கப்பட்டு விட்டது.

தனுஷ்கோடி நகரம் என்பது, முகுந்தராயர்சத்திரம், கம்பிப்பாடு, அரிச்சல்முனை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. இதில் கம்பிப்பாடு பகுதியில், ரெயில் நிலையம், தபால் அலுவலகம், துறைமுகம், சுங்க அலுவலகம், மருத்துவமனை, பள்ளிக்கூடம், ரெயில்வே குடியிருப்புகள், கிறிஸ்தவ ஆலயம் போன்றவை இருந்தன. தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே கப்பல் மூலம் பல விதமான பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டன. அப்பேர்ப்பட்ட சுறுசுறுப்பான வர்த்தக நகரம் அடியோடு அழிந்து போன நாள் தான், 1964 டிசம்பர் 22-23. அன்றைய தினம் வீசிய புயலையும் கடல் சீற்றத்தையும் அந்த சிறு துறைமுகப்பட்டினத்தால் எதிர்கொள்ள இயலவில்லை.

டிசம்பர் 22 இரவு தொடங்கிய மழை பெய்தது...பெய்தது... விடிய விடிய பெய்துகொண்டே இருந்தது. நள்ளிரவில் திடீரென ராட்சத கடல் அலைகள் சீறிப்பாய்ந்தன. இதனால் கடல் கொந்தளித்து ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. புயல் தாக்கியபோது, 280 கி.மீ.வேகத்தில் சூறாவளிக்காற்று வீசியதால் கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து தரைமட்டமாயின. ரெயில் நிலையம், துறைமுகம், கிறிஸ்தவ ஆலயம் உள்பட எதுவுமே தப்பவில்லை. உள்ளே சிக்கியவர்கள் யாருமே பிழைக்கமுடியவில்லை.

புயல் தாக்குவதற்கு முன், தனுஷ்கோடி நோக்கி ரெயில் ஒன்று வந்து கொண்டு இருந்தது. வெளிமாநில கல்லூரி மாணவர்கள், சுற்றுலா பயணிகள் என 115 பேர் வரை அதில் பயணம்செய்தனர். அந்த ரெயில் புயலில் சிக்கி கவிழ்ந்ததில் அனைவருமே பலியானார்கள். அந்த ரெயிலின் பெட்டிகள் 15 கி.மீ. தூரம் வரை இழுத்துச்செல்லப்பட்டன. தண்டவாளம் இருந்த சுவடு தெரியாமல் பிய்த்து எறியப்பட்டது.

நடுவில் தண்டவாளமும் இருபுறமும் கப்பலும் நின்ற அன்றைய தனுஷ்கோடி துறைமுகம் புயலில் துடைத்து எறியப்பட்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்தது.



தெற்கே மன்னார்வளைகுடா, வடக்கே பாக் ஜலசந்தி என இருபுறமும் இருந்து கொந்தளித்து வந்த கடல், தனுஷ்கோடியின் 90 சதவீத நிலப்பரப்பை விழுங்கியது. இதில் 3 ஆயிரம் பேர் வரை மாண்டதாக தகவல் வெளியானது.

அன்றைய தகவல் தொடர்பு வசதிகளற்ற சூழ்நிலையில் தனுஷ்கோடியில் என்ன நடந்தது என்பதை வெளிஉலகம் அறிந்து கொள்ள ஓரிரு நாளாகி விட்டது.

எஞ்சிய நிலமும் கடலுக்குள்...

ஒரு காலத்தில் பெரும் வர்த்தக நகரமாக விளங்கிய தனுஷ்கோடி, 1964 பேரழிவுக்குபின் பின் வாழத்தகுதியற்ற நகரமாக ஆகி விட்டது.

இப்போது ராமேசுவரத்தில் இருந்து முகுந்தராயர்சத்திரம் வரை மட்டுமே கொஞ்சம் நிலப்பரப்பை பார்க்கமுடிகிறது. அதற்கு அப்பால் 10 கி.மீ. தூரத்துக்கு சுமார் 100 அடி அகலத்திற்கு நீண்ட மணற்பரப்பாக எஞ்சி இருப்பதே இன்றைய தனுஷ்கோடி. வெறும் செங்கல் சுவர்களுடன் மிஞ்சிய கட்டிட இடிபாடுகளை மட்டுமே இப்போது நாம் காணமுடியும்.

சிதைந்து கிடக்கும் தனுஷ்கோடி இன்று ஒரு சுற்றுலாத்தலமாக மாறியுள்ளது. ராமேசுவரம் வரும் பலரும் கார், வேன்களில் சென்று அழிந்து போன தனுஷ்கோடியை பார்த்து திரும்புகிறார்கள்.

தனுஷ்கோடியை புயல் தாக்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததன் நினைவாக கடந்த 2014-ம் ஆண்டு அதற்கு புத்துயிர் அளிக்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தத் தொடங்கியது.

அதன்படி ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, முகுந்தராயர் சத்திரத்தில் இருந்து தனுஷ்கோடி, கம்பிப்பாடு வழியாக அரிச்சல்முனை வரை சாலை அமைக்கப்பட்டது. அதன் பலனாக தற்போது சுற்றுலா பயணிகள் கார் - வேன்களில்





அரிச்சல்முனை வரை சென்று திரும்ப முடிகிறது. ராமேசுவரம் - அரிச்சல்முனை இடையே அரசு சார்பிலும் பஸ் வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

தமிழகத்தின் "தென்கிழக்கு முனை"யாக இன்று இருப்பது தனுஷ்கோடியின் அரிச்சல்முனை தான். ராமேசுவரத்தில் இருந்து இங்கு வரை இப்போது போக்குவரத்து வசதி உள்ளது. இங்கிருந்து இலங்கையின் தலைமன்னார் சில (கடல்) கிலோ மீட்டர் தொலைவு தான்.

ஆனால் பலத்த காற்று வீசும் சமயங்களில் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருப்பதால் அந்த குறிப்பிட்ட காலங்களில் மட்டும் சுற்றுலா பயணிகள் தனுஷ்கோடி செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இன்று நீளவாக்கில் எஞ்சியிருக்கும் தனுஷ்கோடியின் இருபுறமும் கடல் அவ்வப்போது சீறி கொஞ்சம் கொஞ்சமாக நிலப்பரப்பை விழுங்கி வருவது கவலை தரும் விஷயமாக உள்ளது.

தமிழகத்தின் கடலோர சுற்றுலாத்தலமாக இருந்த போதிலும் மிகவும் ஆபத்தான கடல் பகுதி, தனுஷ்கோடி என்பது குறிப்பிடத்தக்கது.



உயிர் தப்பிய ஜெமினி - சாவித்திரி

தனுஷ்கோடியை புயல் தாக்கியபோது, அன்றைய பிரபல நட்சத்திர தம்பதியான ஜெமினிகணேசனும், சாவித்திரியும் ராமேசுவரத்தில் தங்கியிருந்தார்கள். முந்தியநாள் (டிச 22) அவர்கள் தனுஷ்கோடியை சுற்றிப்பார்த்து விட்டு மாலையில் ராமேசுவரம் திரும்பி விட்டதால் உயிர் தப்பினார்கள்.

அன்றிரவு ராமேசுவரத்திலும் புயலும் மழையுமாக இருந்த நிலையில் ஒருவித பீதியில் தூங்காமல் தவித்த அவர்களுக்கு மறுநாள் காலையில் தான் தனுஷ்கோடி பேரழிவு தெரியவந்தது. இதுபற்றி சென்னை திரும்பிய பிறகு நிருபர்களிடம் பேசிய அவர்கள், பெரிய கண்டத்தில் இருந்து தப்பினோம்" என்று குறிப்பிட்டனர்.

புயல் வீசப்போவது தெரியாமல் 22ரூந் தேதி தனுஷ்கோடியிலேயே தங்கியிருக்க சாவித்திரி விருப்பம் தெரிவித்து இருந்தார். ஆனால் ஜெமினியின் வற்புறுத்தலால் அவர்கள் மாலையில் ராமேசுவரம் சென்று தங்கி விட்டனர். "அன்று மட்டும் தனுஷ்கோடியில் நாங்கள் தங்கிருந்தால் புயல் எங்களையும் விழுங்கியிருக்கும்" என்று இருவரும் பதற்றத்துடன் தெரிவித்தனர்.

**- மணிராஜ், திருநெல்வேலி**

இந்தியா செய்திகள்
India News

# புலம்பெயர் தமிழர்கள் நல வாரியம் அமைப்பு

## தமிழக முதல்வருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் பாராட்டு

புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்ததோடு, அதற்குரிய தலைவர், வெளிநாட்டுத் தமிழர்களின் பிரதிநிதிகள், அரசு சார் அலுவலர்கள் ஆகியோரை நியமனம் செய்ததோடு, வெளிநாடு வாழ் தமிழர் நல நிதியும் ஒதுக்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

உலகில் 70க்கும் மேற்பட்ட நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இலங்கை, மியான்மர், மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, ரீயூனியன், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்ந்தும் இந்நாடுகளில்கூட இந்தியத் தூதுவர்களாகத் தமிழர்களை இந்திய அரசு நியமிப்பதில்லை. இந்தக் குறையை போக்கும் வகையில் புலம்பெயர் தமிழர் நல வாரியமும், உலகத் தமிழ்ச் சங்கமும் செயல்பட்டு, அத்தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுடன் உலகத் தமிழர்கள், தமிழக அரசின் இம்முயற்சியை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)
தலைவர்.





# காங்கிரஸ் கூட்டணியை கமல் விரும்புவது ஏன்?

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் வருகிற பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி சேருவதில் உறுதியாகிவிட்ட நிலையில் எந்த கூட்டணியில் இடம் பெறுவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வருகிற 24-ந்தேதி டெல்லியில் ராகுல் நடத்தும் பாதயாத்திரையில் கமல் 50-க்கும் மேற்பட்ட தொண்டர்களுடன் கலந்து கொள்கிறார். கமலின் இந்த திடீர் மனமாற்றம் காங்கிரசார் மத்தியில் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரியும் கமலை வரவேற்றுள்ளார்.

கமலின் இந்த திடீர் முடிவுக்கு காரணம், பாராளுமன்ற தேர்தல் என்பதால் கூட்டணி தேசிய கட்சிகளுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அதுவும் காங்கிரஸ் இருக்கும் அணி பலமான அணியாகவும், பா.ஜனதாவுக்கு மாற்றாகவும் இருக்கும் என்று நம்புகிறார்.

எனவே தான் காங்கிரசுடன் கைகோர்க்க விரும்புவதாக கூறப்படுகிறது. கொள்கை ரீதியாக பா.ஜனதாவுடன் உடன்பாடு வைத்துக்கொள்ள இயலாது என்பதால் காங்கிரசுடன் பயணிக்க முடிவுசெய்து விட்டார்.

கமலின் வருகை காங்கிரசுக்கு பலம் கொடுக்கும் என்று காங்கிரசும் எதிர்பார்க்கிறது. ஒருவேளை ஹேஸ்யமாக சொல்லப்படுவது உறுதியாகிவிட்டால் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கவும் மக்கள் நீதி மய்யம் தயாராகி விட்டது. இது ஒருவகையில் காங்கிரசுக்கும் வாய்ப்புதான். ஏனெனில் தி.மு.க. கூட்டணி மெகா கூட்டணியாக உருவாகும் பட்சத்தில் தேவையான எண்ணிக்கையில் தி.மு.க.விடம் இருந்து சீட் பெறுவது மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும். அதை தவிர்க்கவே கமல் காங்கிரஸ் கூட்டணியை விரும்புவதாக கூறப்படுகிறது. இதுபற்றி காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளிடம் கேட்ட போது, "ஜனநாயகத்தை விரும்புவர் கமல். மதத்தின் பெயரால் மக்களை பிரிப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார். எனவே தான் காங்கிரசுடன் கூட்டணி அமைக்க அவர் விரும்புகிறார்" என்று கூறினார்.

# திருச்சியில் கைதான இலங்கையர்கள் குறித்து வெளியான திடுக்கிடும் தகவல்!

## போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக கைது



போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக திருச்சி சிறப்பு முகாமில் இருந்த 8 இலங்கையர்கள் உட்பட 09 பேரை இந்தியாவின் தேசியப் புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

சி. குணசேகரன் என்ற குணாவும், புஷ்பராஜா என்ற பூக்குட்டி கண்ணாவும் சேர்ந்து போதைப்பொருள் கும்பல் ஒன்றை நடத்திவந்ததாக என்.ஐ.ஏ தெரிவிக்கிறது.

இவர்களுக்கான போதைப் பொருளை, பாகிஸ்தானிலிருந்து செயல்படும் ஹாஜி சலீம் என்பவர் அனுப்பி வந்துள்ளார். இந்த போதைப் பொருள் மற்றும் ஆயுதக் கும்பல், இந்தியாவிலும் இலங்கையிலும் செயல்பட்டதாகவும் இரு நாடுகளிலும் புலிகள் இயக்கத்தை மீண்டும் உருவாக்க முயன்றதாகவும் என்.ஐ.ஏ. தெரிவிக்கிறது.

இது தொடர்பான ஒரு வழக்கை கடந்த ஜுலை 8ஆம் திகதியன்று தாமாக முன்வந்து என்.ஐ.ஏ. பதிவு செய்தது.

இது தொடர்பாக என்ஐஏவின் டி.ஐ.ஜி. காளிராஜ் மகேஷ்குமார் தலைமையிலான அணி ஒன்று திருச்சி சிறப்பு முகாமில், கடந்த ஜுலை 20ஆம் திகதி சோதனைகளை நடத்தியது.

இந்த சோதனைகளின் போது, கைப்பேசிகள், சிம் அட்டைகள், ஹார்ட் டிஸ்க்கள், பென் டிரைவ்கள், மடிக்கணினிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இதற்குப் பிறகு நேற்று, திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த சி. குணசேகரன், புஷ்பராஜா, முகமது அஸ்மின், அழகப்பெரும சுனில் காமினி பொன்சேகா, ஸ்டான்லி கென்னடி ஃபெர்னான்டோ, லாடியா சந்திரசேன, தனுஷ்க ரோஷான், வெள்ளே சுரங்க, திலீபன் ஆகிய ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முகமது அஸ்மின் மட்டும் ராமநாதபுரம் தேவ கோட்டையைச் சேர்ந்தவர். மற்றவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் வேறு சில குற்றங்களுக்காக திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

2021ஆம் ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த சுரேஷ் ராஜன் என்பவர் கொச்சிக்கு அருகில் உள்ள அங்கமாலியில் கைது செய்யப்பட்டார். ஹாஜி சலீமுடன் இருந்த தொடர்புக்காக கைது செய்யப்பட்ட அவரை விசாரித்ததில், அவரது வங்கிக் கணக்கிலிருந்து பல கோடி ரூபாய் கொடுக்கல் - வாங்கள் நிகழ்ந்திருப்பது தெரியவந்தது.

இந்தியாவைத் தளமாகப் பயன்படுத்தி, இலங்கைக்கு போதைப் பொருட்களையும் ஆயுதங்களையும் கடத்துவதில் முக்கியப் புள்ளியாக சுரேஷ் ராஜன் இருந்தது தெரியவந்தது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் விழிஞ்சம் துறைமுகத்திற்கு அருகில் படகு ஒன்றை சந்தேகத்தின் பேரில் இடை மறித்த பாதுகாப்புப் படையினர், அதனைச் சோதனையிட்டனர். அந்தச் சோதனையில் படகிலிருந்து 300 கிலோ ஹெரோயின், ஐந்து ஏகே 47 ரக துப்பாக்கிகள், 1000 தோட்டாக்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இந்த வழக்கு தொடர்பாகவே கொச்சியைச் சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள், இந்த 9 பேரையும் கைது செய்துள்ளனர்.

# மராட்டிய மாநிலத்தில் மணப்பெண்கள் கிடைக்காததால் ஆண்கள் போராட்டம்...

## "பெண் சிசுவதையைத் தடுக்க மாநில அரசு தவறிவிட்டது" என்றும் குற்றம்சாட்டு



மராட்டிய மாநிலத்தில் திருமணம் செய்து கொள்ள, மணப்பெண்கள் கிடைக்காததால் ஆண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் சமீப காலமாக ஆண் - பெண் பாலின சமநிலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. சில மாநிலங்களில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவாக இருக்கிறது. இதனால் ஆண்களுக்கு திருமணம் செய்ய பெண்கள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. சில மாநிலங்களில் பெண்களைத் திருமணம் செய்ய வரதட்சணை கொடுக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருமணத்திற்கு பெண் கிடைக்காத ஆண்கள் இணைந்து மராட்டிய மாநலத்தில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

அந்த மாநிலத்தைச் சேர்ந்த சோலாப்பூரில் திருமணமாகாத ஆண்கள் இணைந்து இதற்காக பேரணி நடத்தினர். இந்தப் பேரணியில் அதிகமான ஆண்கள் மணமகன் போன்று ஆடையணிந்து கலந்து கொண்டனர். சிலர் மணமகன் போல் அலங்காரம் செய்து கொண்டு பேண்ட் வாத்தியங்கள் முழங்க குதிரையில் ஊர்வலமாக வந்தனர்.

அவர்கள் தங்களுக்குத் திருமணம் செய்ய அரசு பெண் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்று கோரி மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை மனுகொடுத்தனர்.

அவர்கள் மனுவில், தாயின் வயிற்றில் இருக்கும் கருவின் பாலினத்தை கண்டறிபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்த ஜோதி கிராந்தி பரிஷத் நிறுவனர் ரமேஷ் கூறும் போது, இந்தப் பேரணியை சிலர் கிண்டல் செய்யலாம். ஆனால் ஆண்-பெண் விகிதாச்சாரம் மாறுபட்டு இருப்பதால் ஆண்களுக்கு திருமணம் செய்ய பெண்கள் கிடைப்பதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.மராட்டிய மாநிலத்தில் ஆயிரம் ஆண்களுக்கு 889 பெண்கள்தான் இருக்கின்றனர். இதற்குக் காரணம் பெண் சிசுவதைதான். பெண் சிசுவதையைத் தடுக்க மாநில அரசு தவறிவிட்டது" என்று குற்றம் சாட்டினர்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச நூலக விழா சிறப்புற நடைபெற்றது

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வலிகாமம் கிழக்கு பிரதேச சபயின் புத்தூர் நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் நுலகர் திருமதி. கர்சனமாலா உ த ய கு மா ர ன் தலைமயில் புதன்கிழமை (21) சிறப்புற நடைபெற்றன.

தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுலகர் சிவபாக்கியநாதன் கேதீஸ்வரன், சபையின் செயலாளர் இராமலிங்கம் பகீரதன், சோமாஸ்கந்தா கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலதரப்பட்டவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இத் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள், அதீதிகளின் உரைகள், அரிச்சுவடி முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் என பலதரப்பட்ட தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையிலான கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் உள்ளூராட்சி நூலக வாரத்தினை முன்னிட்டு பிரதேச சபையின் நூலகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் சிறந்த வீட்டு நூலகத்தினை முகாமைசெய்வதற்கான கௌரவம் ப. கஜேந்திரனுக்கு வழங்கப்பட்டதுடன் சிறந்த வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

மேலும், நூலகங்களுக்கு இடையில் தேசிய நூலக மற்றும் சுவடிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் போட்டியில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் நூலகம் நாடாளாவிய ரீதியில் 3 ஆம் இடத்தைப் பெற்றது.

இவ் விருதினை கடந்த வாரம் ஜயவர்த்தன பல்கலைக்கழக துணைவேந்தாரிடம் நூலகர் திருமதி. கர்ஞனமாலா உதயகுமாரன் பெற்றுக்கொண்டார். அவ் விருதினை இந் நிகழ்வில் வைத்து பிரதேச மக்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் சபையில் காட்சிப்படுத்துவதற்காக நூலகரினால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இந் நிகழ்வில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் நுலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் புதுவை நாதம் நுர்லை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வெளியிட்டு வைக்க நூலின் முதற் பிரதியினை சித்த சுதேச வைத்தியர் இளையவன் செல்லத்துரை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நூலுக்கான நயவுரையினை ஆசிரியர் திருமதி. கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் ஆற்றியிருந்தார்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

Majestic City | tasty தமிழா | OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS | NEW SPICELAND SUPER MARKET

## CENTRE FOR YOUTH EMPOWERMENT & COMMUNITY SERVICES - TORONTO

*Presents*

**For Tickets ticketmaster**



# நீயா நானா புகழ் கோபிநாத்துடன்

# ஒரு மாலைப்பொழுது

## Chinese Cultural Centre

## 5183 Sheppard Avenue East.

## Saturday January 14th, 2023 at 6:30 PM

- அனைவரையும் மகிழ்விக்கும் கனடிய இளம் வாத்தியக் கலைஞர்களின் இனிய இசையோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
- பின்னர் நீயா? நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கான உயரிய கௌரவம் வழங்கப்பெற்று தொடர்ந்து அவர் ஒரு மணி நேர பயனுள்ள உரையாற்றுவார்.
- இறுதியில் மேடையில் அவருடன் புகைப்படம் எடுப்பதற்குரிய சந்தர்ப்பம் அனைவருக்கும் வழங்கப்படும்.

**For information, visit www.cyecstoronto.ca or**

**Call 647 762 9512 or 647-891-7725**

**E-mail: admin@cyecstoronto.ca**

RE/MAX REALTY INC, BROKERAGE ACE 416-270-1111

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES Kokulan Baskaran

First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit

Winners Edge Sports Bar 416-457-4300

MAHAANS Pick & Press Oil Mill Inc. 5635 Finch Ave East, Scarborough.

ASSORTED SOUTH INDIAN SNACKS & SWEETS 514-833-8332

# கோயிலில் காப்பு கட்டும் பூஜையுடன் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடு தொடங்கியது

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடக்கும் வாடிவாசல் அருகே காளியம்மன் கோயில் உள்ளது. இக்கோயில் விழாவில் காப்பு கட்டும் நிகழ்ச்சி நேற்று தொடங்கியது. இந்த விழாவையொட்டித்தான், ஜல்லிக்கட்டு போட்டியை ஊர் மக்கள் திரண்டு நடத்துகிறார்கள்.இப் போட்டியை தொடங்கிவைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஆகியோரை அழைக்க ஜல்லிக்கட்டு விழா கமிட்டியினர் முடிவு செய்துள்ளனர்.

போட்டியில் சிறந்த காளை, மாடுபிடி வீரருக்கு கார்கள், மற்ற வீரர்கள், நின்று விளையாடும் காளைகளுக்கு பல லட்ச ரூபாய் மதிப்பிலான ஏராளமான பொருட்கள் வழங்கப்பட இருக்கின்றன.இந்தப் போட்டியை, வாடிவாசல் அருகே உள்ள காளியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டுதான் ஊர் மக்கள் நடத்துகின்றனர். நேற்று



நடந்த இக்கோயில் விழா காப்பு கட்டும் நிகழ்ச்சியில் ஊர் மக்கள், ஜல்லிக்கட்டு கமிட்டி நிர்வாகிகள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

கோயில் காளைகளுக்கு சிறப்பு பூஜை நடந்தது. ஜல்லிக்கட்டில் இக்கோயிலின் காளைகள்தான் வாடிவாசலில் இருந்து முதலாவதாக அவிழ்த்து விடப்படும். இக்கோயில் திருவிழா தொடங்கியதையொட்டி, 15 நாட்கள் மாடுபிடி வீரர்கள், ஊர் மக்கள் காப்பு கட்டி விரதம் இருப்பர்.ஜனவரி 3, 4ம் தேதிகளில் இக்கோயில் திருவிழா நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஜனவரி 17ம் தேதி ஜல்லிக்கட்டு நடைபெறும். இதையொட்டி, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் நேற்று முதலே தொடங்கி விட்டனர்.

அமைச்சர் ஆலோசனை: இந்நிலையில், ஜல்லிக்கட்டு போட்டி ஏற்பாடுகள் குறித்து கால்நடைத்துறை அதிகாரிகளுடன் சென்னை நந்தனத்தில் உள்ள அலுவலகத்தில், நாளை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆலோசனை நடத்த உள்ளார்.

# உலகக் கோப்பை ஹாக்கி போட்டி | சென்னை வந்த கோப்பைக்கு உற்சாக வரவேற்பு



ஒடிசாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை ஹாக்கி போட்டியின் (2023 Men's FIH Hockey World Cup) கோப்பையை, தமிழ்நாடு ஹாக்கி விளையாட்டு சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் முதல்வரிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உலகக் கோப்பை ஹாக்கி போட்டி ஒடிசா மாநிலம், புவனேஷ்வர் ரூர்கேலாவில் 13.01.2023 முதல் 29.01.2023 வரை நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயணம் மேற்கொள்ளும் ஹாக்கி உலகக் கோப்பை மகாராஷ்டிரா மாநிலம், மும்பையிலிருந்து விமானம் மூலமாக இன்று (டிச.21) சென்னை வந்தடைந்தது. இந்த ஹாக்கி உலகக் கோப்பைக்கு சென்னை விமான நிலையத்தில் ஹாக்கி விளையாட்டு வீரர், வீராங்கனைகள், தமிழ்நாடு ஹாக்கி சங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து சென்னை, தலைமை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உலகக்கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம், இந்திய ஹாக்கி செயலாளர் சேகர் மனோகரன் மற்றும் நிர்வாகிகள் வழங்கினர். இதையடுத்து, உலகக்கோப்பையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம், முதலமைச்சர் வழங்கினார். இக்கோப்பையானது, தமிழ்நாட்டின் முன்னணி ஹாக்கி வீரர்கள் உள்ளிட்டோரால் அண்ணா பல்கலைக்கழகம், எம்.ஓ.பி. வைஷ்ணவா மகளிர் கல்லூரி ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, இன்று (டிச.21) மாலை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்திற்கு கொண்டுவரப்படும்.

அங்கு, பாரம்பரிய முறையில் மேள தாளங்கள் முழங்க கோப்பைக்கும் வீரர்களுக்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்படும். பின்னர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அணி மற்றும் காவல்துறை அணிகளிடையே சிறப்பு கண்காட்சி போட்டி நடைபெறவுள்ளது. கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. பிறகு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஹாக்கி உலகக் கோப்பையை கேரளா ஹாக்கி நிர்வாகிகளிடம் வழங்குவார். மேலும் மாநிலம் முழுவதும், அடுத்த 15 நாட்களில் 100 பள்ளிகளில் விழிப்புணர்வு ஹாக்கி போட்டிகளை இந்திய ஹாக்கி அமைப்பு, தமிழ்நாடு ஹாக்கி சங்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நடத்தவுள்ளது.

# விமான நிலையங்களில் கரோனா பரிசோதனைக்கு வழிகாட்டுதல்கள் தேவை: மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம்



சீனா மற்றும் ஹாங்காங்கில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு விமான நிலையங்களில் கரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசுக்கு தமிழக அரசின் பொது சுகாதாரத் துறை சார்பில் கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சீனாவில் பிஎஃப் 7 எனும் ஒமைக்ரான் திரிபு வேகமாக பரவி வருகிறது. இதனால் அந்நாட்டில் 1.48 லட்சம் பேருக்கு கரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட உயிரிழப்புகளைக் கவனத்தில் கொண்டு உலகம் முழுவதும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து மத்திய சுகாதாரத் துறை சார்பிலும் அனைத்து மாநிலங்களுக்கும் கரோனா வழிகாட்டு நெறிமுறைகளைக் கடைபிடிக்கவும், பரிசோதனைகளை அதிகப்படுத்தவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.இந்நிலையில், தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம், மத்திய பொது சுகாதாரப் பணிகள் இயக்குநரகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், சீனா மற்றும் ஹாங்காங்கில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களில் கரோனா பரிசோதனைகளை மேற்கொள்ள தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், அந்தக் கடிதத்தில் தமிழகத்தில் ஏற்கெனவே 97 சதவீதம் முதல் தவணை, 92 சதவீதம் இரண்டாவது தவணை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு விட்டன. கரோனாப் பரவலைப் பொருத்தவரை தமிழகம் மிகவும் பாதுகாப்பான மாநிலமாகத்தான் உள்ளது.

எனவே, இந்த நிலையை தக்கவைத்துக் கொள்ளவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் தமிழக விமான நிலையங்களில் கரோனா பரிசோதனை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் பரவும் உருமாறிய கரோனா: தமிழக அரசு அவசர ஆலோசனை

சீனாவில் பரவும் உருமாறிய கரோனா தொற்று தொடர்பாகவும், தமிழகத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக சுகாதாரத்துறை சார்பில் அவசர ஆலோசனை நடைபெற்ற வருகிறது. சீனாவில் பிஎஃப்.7 என்ற உருமாறிய கரோனா தொற்று அதிகரித்துள்ளது.

இதனால் கடந்த ஒரு வாரத்தில் 430 பேர் உயிரிழந்துள்ளனர். சீனா, ஹாங்காங் நாடுகளில் உருமாறிய கரோனா தொற்றின் தாக்கம் அதிகமாக உள்ளதாகவும், அதன் பரவும் தன்மை முந்தைய தொற்றுகளை விட வேகமாக இருக்கும் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்நிலையில் தமிழகத்தில் கரோனா பாதிப்புகள் அதிகரிக்காமல்



இருக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத் துறை செயலாளர் செந்தில்குமார் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதில், மருத்துவக் கல்வி இயக்குநர் , பொது சுகாதாரத் துறை இயக்குநர் , ஊரக நலப்பணிகள் இயக்குநர் , தேசிய நல வாழ்வு குழும திட்ட இயக்குநர் உட்பட சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் கலந்து கொண்டுள்ளனர். இதில் விமான நிலையங்களில் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை கண்காணிப்பது, தமிழக விமான நிலையங்களில் தாமாக முன்வந்து கரோனா பரிசோதனை செய்துக் கொள்ளும் ஏற்பாடுகள் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் தமிழகத்தில் தொற்று உறுதியாகும் அனைத்து கரோனா மாதிரிகளும் மரபணு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுத்தவும் தமிழக சுகாதாரத்துறை திட்டமிட்டுள்ளது.



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers



30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly – Brampton

15 Kenview Blvd. Unit 3 (Upstairs), Brampton, On. L6T 5G7

## கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை

2022, டிசம்பர் 24ம் திகதி சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு
இயேசுவின் பிறப்பை மனமகிழ்ச்சியுடன் நினைவு கூருவோம்

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்."– ஏசாயா 9: 6

## புதுவருட நள்ளிரவு ஆராதனை–2022/23

2022, டிசம்பர் 31ம் திகதி சனிக்கிழமை இரவு 11.000 மணிக்கு
2022ம் ஆண்டின் முடிவையும், 2023 ஆண்டின் ஆரம்பத்தை தேவ சமுகத்தில் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்போம்

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர், உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது."– சங்கீதம் 65: 11

### இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம், இணையில்லா நாமம் இன்ப நாமம்
பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும், பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்
பரிமள தைலமாம் இயேசுவின் நாமம், பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்
வானிலும் பூவிலும் மேலான நாமம், வானாதி வானவர் இயேசுவின் நாமம்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம், நம்பினோரை என்றும் கைவிடா நாமம்
முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம், மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்
சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம், சாபப் பிசாசை துரத்திடும் நாமம்
எல்லாம் வல்ல இயேசுவின் நாமம்

* * *

### இயேசு சொன்னார்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.– யோவான் 14: 13–14

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
*பாஸ்டர் அல்பிரட் செருபிம்*
**647 – 271 7645**

**அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் – புதுவருட வாழ்த்துக்கள்**

# அன்பின் தொனி - 674

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

### விக்கிர ஆராதனைக்காரரின் முடிவு

மேலே கொடுக்கப்பட்ட விக்கிரக ஆராதனைக்காரருடைய வழிபாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் பார்த்தீர்கள். வழி பாடு என்ற பெயரில் நடத்தப்படும் இச் செயல்களில் சில எவ்வளவு அலங்கோலமும் அசிங்கமும் அருவருப்பானதும் என்பதை நீங்களே வாசித்து அறிந்திருக்கிறீர்கள். உண்மையான ஜீவனுள்ள தேவனை மறுதலித்து, விக்கிரகங்களுக்கும் மனிதர்களுக்கும் இப்படிப்பட்ட வணக்கங்களை செலுத்துவதை கர்த்தராகிய தேவன் வெறுப்பதுமல்லாமல் அதைச் செய்பவர்களையும் வெறுக்கிறார். மேலும் பொய் தேவர்களை வழிபடுபவர்களுடைய முடிவு எப்படி இருக்கும் என்பதை பரிசுத்த வேதாகமம் விளக்கமாக விபரித்துக் காட்டுவதை நாம் பார்ப்போம்:

அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். **- 1 கொரிந்தியர் 6: 9-11**

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். **- கலாத்தியர் 5: 19-21**

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். **- வெளிப்படுத்தல் 21: 8**

இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். ஜீவவிருட் சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிறவரும் புறம்பேயிருப்பார்கள். **- வெளிப்படுத்தல் 22: 12-15**

### தகாதவைகளைச் செய்யும்படி ஒப்புக்கொடுத்தார்

அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். **- ரோமர் 1: 21-23**

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமா னப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோ கமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதா பத்தினாலே பொங்கி, ஆடே- ணாடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பல னைத் தங்களுக்குள் அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந் தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். **- ரோமர் 1: 24-27**

### அனைத்து வகைத் தீய செயல்கள்

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர் களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திர ராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். **- ரோமர் 1: 28-32**

**தொடரும்...**

சினிமா

## அரசியலுக்கு ரெடியாகும் விஜய். முக்கிய தலைவருடன் ரகசிய சந்திப்பு



விஜய் நடித்து வரும் "வாரிசு" திரைப்படம் அடுத்த ஆண்டு பொங்கல் தினத்தன்று வெளியாக உள்ளதால் ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார்கள். மேலும் அஜித்தின் "துணிவு" திரைப்படமும் "வாரிசு" படத்துடன் மோதுவதால் ரசிகர்கள் வெறித்தனமாக இத் திரைப்படங்களுக்கு காத்துக்கொண்டிருக்கின்றனர்.

விஜய் பல வருடங்களாக அரசியலில் களமிறங்குவதற்கான நகர்வுகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. அதன்படி கடந்த சில நாட்களுக்கு முன்புகூட பனையூரில் உள்ள விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகளை விஜய் சந்தித்து தனது அரசியல் பிரவேசம் குறித்து பேசியதாக தகவல் வெளிவந்தது. வருகிற 2026 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடப்போவதை குறித்து தனது நிர்வாகிகளுடன் விஜய் கலந்துரையாடியதாக கூட செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில், தமிழ்நாட்டின் ஒரு முக்கிய அரசியல் தலைவரை சமீபத்தில் விஜய் ரகசியமாக சந்தித்ததாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அதாவது பகுத்தறிவு சிந்தனை கொண்ட ஒரு மூத்த அரசியல்வாதியை தனது வீட்டிற்கு அழைத்து வந்து கிட்டத்தட்ட 4 மணி நேரம் அரசியல் குறித்து கலந்துரையாடி இருக்கிறாராம் விஜய்.

மேலும் அந்த அரசியல் தலைவருடன் விஜய் பேசியபோது ஒன்றிய அரசின் மீது மிகப்பெரிய அதிருப்தியை வெளிப்படுத்தினாராம். அதே போல் 2024 ஆம் ஆண்டு வருகிற மக்களவை தேர்தலிலேயே விஜய் போட்டியிடப்போவதாகவும் கூறினாராம். இதனை தொடர்ந்து அந்த அரசியல் தலைவரிடம், விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள் கிராமங்கள் தோறும் பூத் கமிட்டியை மிக உறுதியாக அமைத்துள்ளதாகவும் கூறினாராம். இந்த தகவலை பார்க்கும்போது கூடிய விரைவில் விஜய் அரசிலில் பிரவேசிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

## சுனாமி என்ற ஆழிப்பேரலை

--------------------------------

*சுனாமி என்ற பேரலை சொல்லாமல் வந்த கூற்றுவன்*
*சொந்தபந்தம் சொத்தை எல்லாம் சுருட்டிச்சென்ற பேயது.*
*சொல்லமுடியாச் சோகங்களை சுமத்தி எம்மண்ணை*
*சுடுகாடாய் மாற்றிவிட்ட சுடலைமாடன்.*

*இந்தோனேசியா இந்தியா இலங்கை இனத்தவரை*
*இரக்கமின்றி அள்ளிச்சென்ற இதயமிலா இயமன்*
*இரும்பு இதயம்கொண்ட இன்னல்தரும் இராட்சதன்*
*இந்தஇடர் வேண்டாமென இறைவனை இறைஞ்சுவோம்.*

*குஞ்சுகுழந்தை குமரையெல்லாம் கொள்ளையடித்த கொள்ளைநோய்.*
*குடியிருந்த வீட்டையும் கும்பிட்ட கோவிலையும்*
*குநீர்க் கிணற்றையும் கோலக் குடியிருப்பையும்*
*குடியிருந்த நிலத்தையும் கோலிச்சென்று கொடியவன்.*

*வாழ்வாதாரம் தந்த வள்ளத்தையும் வலைகளையும்*
*வாகன வகைகளையும் வாயில்லாச் சீவன்களையும்*
*வகைதொகை இல்லாமல் வக்கிரம் கொண்டு*
*வாரிச்சுருட்டி வாயில் போட்ட வாசுகி.*

*பள்ளிச் சிறுவரையும் பாடசாலைக் கட்டடத்தையும்*
*பாட்டாளி மக்களையும் பால்குடிக் குழந்தைகளையும்*
*பாத்திரம் பண்டங்களையும் பால்தரும் பசுமாட்டையும்*
*பாக்கி வைக்காமல் பாழ்படுத்திய பாதகன்.*

*ஆண்டாண்டு காலமாய் ஆதரித்த கடலன்னை*
*ஆவேசம் கொண்டெமை அழித்தது ஏன்?*
*ஆண்டவரே வந்தெமை ஆதரிக்க மாட்டீரா?*
*ஆண்டுகள் பத்தானாலும் ஆறாது எங்கள்மனம்.*

--------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**

(416) 844-7453

*(குறிப்பு: 26-12-2004 இல் ஏற்பட்ட சுனாமி என்ற ஆழிப்பேரலை அழிவின் பத்தாவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து எழுதப்பட்ட கவிதை.)*

# ஈழம் அல்லது எல்லாம்: வன்முறையற்ற குழப்பத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டம்

*(சென்றகிழமைத் தொடர்ச்சி)*

புத்தகோயில் திறப்பு விழாவின் பங்கேற்பாளர்கள் முகமூடி அணிந்திருந்தனர். ஒருவேளை புதிதாக முன்மொழியப்பட்ட வெறுப்பு - பேச்சு சட்டங்கள் மற்றும் அவர்களின் செயல்களால் பவுத்த மதத்தை இழிவுபடுத்துவது தங்களைச் சிக்கலில் மாட்டக் கூடும் என்று அவர்கள் பயந்திருக்கலாம். கன்னியா போன்ற இந்து மத வழிபாட்டுத் தலங்களை உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திய பவுத்த பிக்குகள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அனைத்து நெறிகளையும் மீறி வெட்கமின்றி சட்டத்திற்கு முரணாகச் செயற்படுவதாக சட்டத்தரணி இரத்னவேல் வெளிப்படையாகக் கூறியுள்ளார். நான் திருகோணமலைக்கு அருகில் உள்ள இடத்திற்குச் (கன்னியா) சென்றபோது, வெள்ளைநிற உட்பாவாடை மற்றும் இரவிக்கை அணிந்த ஒரு இளம் சிங்களப்பெண் பொது இடத்தில் தனது இரவிக்கையிலிருந்து வெளியேறும் மார்பகங்களுடன் வெந்நீர் நீருற்றுகளில் - பொது இடங்களில் - குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். வழிபாடு செய்பவர்களில் யாராவது ஈர்க்கப்படுவார்களா என்று பார்க்க விரும்பினேன், ஆனால் என் மனைவி என் கையைப் பிடித்து என்னை அழைத்துச் சென்றார். இப்படியான மக்கள் பவுத்த மதத்திற்கு அவமானம்!

வறிய தமிழர்களுடன் போட்டியிடும் இராணுவம்

இலங்கையில் மிகவும் இராணுவ மயமாக்கப்பட்ட மாவட்டமான முல்லைத்தீவில் உள்ள அனைத்துப் பொதுமக்களையும் விட இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அதிகமான காணிகள் உள்ளன. முல்லைத்தீவைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவம் 33 முகாம்களை வைத்துள்ளது.

வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் திரு. துரைராஜா இரவிகரனின் கருத்துப்படி, இராணுவத்தினர் விடுமுறை விடுதிகள், உணவகங்கள் நடத்துவது முதல் தனியார் காணிகளில் தோட்டம் செய்வது, கட்டிடக் கற்களை விற்பனை செய்தல், வணிக வளாகங்களை நடத்துதல், முடிதிருத்தும் நிலையங்களில் முடி வெட்டுதல், தயிர் மற்றும் வெண்தயிர் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்வது வரை அனைத்து வகையான வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

படையினரின் ஊதியம் பொதுப் பணத்திலிருந்து வரும்போது, இராணுவம் பயன்படுத்தப்படும் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களாக இருக்கும் போது, வறிய பொதுமக்கள் (இராணுவத்தோடு) போட்டியிட முடியாது. இந்த நியாயமற்ற போட்டிச் சூழலில், நிலம் வாங்கவும், தொழிலாளர்களை அமர்த்தவும் வேண்டிய நிலையில், தமிழ் மக்களுக்கு தங்களது வாழ்வாதாரத்தை விரிவுபடுத்த வழி இல்லை. அவர்களுக்கு இலவச வேலை இல்லை. அவர்கள் மற்றவர்களின் நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் வறுமையில் மூழ்கியுள்ளனர்.

இந்துக் கோவில்கள் போன்ற தமிழர்களது பல பாரம்பரிய இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, பவுத்த கோவில்கள் இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் கட்டப்பட்டுள்ளன என்று இரவிகரன் மேலும் கூறுகிறார். குறிப்பாக நீதிமன்ற உத்தரவுகளைக்கூட மீறிய ஞானசார தேரரை அவர் குறிப்பிடுகிறார். சட்டத்தரணி இரத்னவேல் மற்றும் மற்றுமொரு சட்டத்தரணி காண்டீபன் தங்கராஜா ஆகியோர் இதனை உறுதிப்படுத்துகின்றனர்.



நீதிமன்ற உத்தரவை மீறுவதற்கு காவி உடையில் உள்ள முரடர்களுக்கு காவல்துறை எவ்வாறு உதவுகிறது பற்றி திரு சம்பந்தன் சாட்சியம் அளித்துள்ளார். செம்மலை கோவில் விவகாரத்தில் ஒரு நீதிபதியின் உத்தரவுகளை (காவல்துறை) எப்படிக் காலில் போட்டு மிதித்து அவற்றை மீறுவதாக நான் முறைப்பாடு அளித்துள்ளேன். அங்கு ஒரு இந்துக் கோவிலை ஞானசாரா தேரரும் அவரது நண்பர்களும் ஒரு பவுத்த கோவிலைக் கட்டுவதற்காக கையகப் படுத்தியுள்ளார்கள்.
தேர்தலுக்கு முந்தைய நாள் தேர்தல் ஆணையம் மூலம் காவல்துறையின் அதிபருக்கு சிக்கலொன்று ஏற்பட்டுள்ளதாகவும், அது தேர்தலை சீர்குலைக்கக்கூடும் என்றும் தெரிவித்தேன். அதன் பின்னரும் காவல்துறையினர் நீதிபதியின் உத்தரவை நிறைவேற்றவில்லை.
அதில் தலையிடுவதாக வாக்குறுதி அளித்த பொலீஸ்மா அதிபரும் எதுவும் செய்யவில்லை, அவர் இப்போதும் பொலீஸ் மா அதிபராககத்தான் இருக்கிறார். அவர் சட்டதத்துக்கு மாறாக எஸ். எஸ். பி. ஷானி அபேயசேகர மற்றும் சுங்கத் தடுப்பு இயக்குனர் இரஞ்சன் கனகசபை ஆகியோரைத் தண்டிக்கின்றார்.

தமிழர்களின் காணிகளை சிங்களர்களின் பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்வதில் மகாவலித் திட்டம் மிகப்பெரிய குற்றவாளி என்று திரு. சம்பந்தன் தெரிவித்துள்ளார். திரு சம்பந்தன் இலங்கைத் தமிழர்களின் தலைவராக ஏற்றுக் கொள்ளகப்பட்ட ஒருவர் ஆவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொருத்தமான எதிர்காலத் தலைவர் என அடிக்கடி குறிப்பிடப்படும் இராசமாணிக்கம்,
மகாவலியின் (திட்டங்களில்) கீழ் குடியேறியவர்களில் 103,630 (96.2**%**) சிங்களர்கள் என்று கூறுகிறார். இதற்கு மாறாக, 1,825 குடும்பங்கள் (1.4**%**) தமிழர்கள் மற்றும் 3,068 குடும்பங்கள் (2.4**%**) முஸ்லிம்கள் ஆவர்.
தென்னிலங்கைப் பத்திரிகைகள் நிறையப் பழி சுமத்த வேண்டும். எடுத்துக்காட்டாக மகாவலி திட்டத்திற்கு எதிராக 2018 ஒகஸ்ட் மாதம் நடந்த பாரிய எதிர்ப்புப் பேரணியைக் கவனியுங்கள். புகழ்பெற்ற செய்தித்தாள்களை நான் தொடர்ந்து படிப்பவன் என்றாலும், கொழும்பு டெயிலிமிரர் பத்திரிகையைத் தவிர அந்த அணிவகுப்புக் குறித்த எந்த செய்தியும் எனக்கு நினைவில் இல்லை. பத்திரிகைகள், சிங்கள இனவெறிக்குத் துணை போகிறது என்று தோன்றுகிறது, இவை எதையும் அவை அம்பலப்படுத்தாது. ஊழல் போன்ற அரசின் அத்துமீறல்கள் குறித்து நான் எழுதும்போது, சில செய்தித்தாள்கள் வெளியிட அணியமாக இருக்கின்றன என்பது எனது பட்டறிவு ஆகும். இருப்பினும், தமிழர்களுக்கு எதிரான சிங்கள அத்துமீறல்கள் குறித்து நான் எழுதும்போது, ஆசிரியர்கள் இடப்பற்றாக் குறை இருப்பதாக சாக்குப் போக்குச் சொல்கிறார்கள்.

இராணுவம்: மிகப் பெரிய எதிரி

இலங்கை மக்களின் மிகப் பெரிய எதிரி இராணுவம் என்பது பலருக்கு வெளிப்படையாகத் தெரியும். சிங்கள இளைஞர்களாக இருந்தாலும் சரி, தமிழ் இளைஞர்களாக இருந்தாலும் சரி, நம் மத்தியில் நடந்த பல படுகொலைகளுக்கு இராணுவமே பொறுப்பாகும். அதிகாரத்தில் இருப்பவர்கள் இராணுவத்தை தாழ்த்த அல்லது அவமானப் படுத்தத் தயங்குகிறார்கள். ஆயுதப்படைகளுக்குப் பயந்து அரசாங்கம் செயல்படும் போது அது ஜனநாயகத்தை கீழறுக்கிறது (**undermines**) எனலாம். ஆயினும்கூட, 2023 வரவு - செலவுத் திட்டத்தின் மிகப்பெரிய நிதி ஒதுக்கீடு ஆயுதப் படைகள் பெற்றுக் கொண்டன. தமிழ் மக்களின் உண்மையான எதிரிக்கு - ஏன் அனைத்து இலங்கையர்களது எதிரிக்கு - இவ்வளவு தொகையை வழங்கும் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (**TNA**) நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வரவு - செலவுத் திட்டத்தை தமது கட்சி விமர்சித்தாலும், ஜனாதிபதி இரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் அரசியல் சிக்கலுக்குத் தீர்வுகாண விருப்பம் தெரிவித்ததால், அதற்கு எதிராக வாக்களிக்கவில்லை என்று விளக்கினார் (டெய்லி மிரர், 23.11.2022).

**- இரத்னஜீவன் எச். ஹூல்**



அப்போது இரணில் விக்கிரமசிங்க தமிழர் வயிற்றில் கத்தியை வைத்து 180 பாகைத் திருப்பத்தை மேற்கொண்டார். டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது (30.11.2022) போல **"**மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்த அவர் தயாராக உள்ளார்.**"** எப்போதும் போல, நாங்கள் ஏமாற்றப்பட்டோம். மாவட்ட சபைகள் 1981 இல் ஜே.ஆரும் அவரது ஐதேக குண்டர்களும் நமக்கு வழங்கிய ஒன்றாகும். அவர்களின் நா.உறுப்பினர்கள் கோரமான குண்டர்கள் உருவில் யாழ்ப்பாணத்திற்கு வந்து வன்முறைகளைக் கட்டவிழ்த்து தேர்தல் மோசடி செய்ய முயன்றனர்.

சிங்கள அரசு ஈழத்தைத் தொடரும் வேளையில், இன்று கொஞ்சம் நாளை கொஞ்சம், ஒவ்வொரு தாமதமும் தமிழர்களின் தேர்வுகளை (**options**) குறைக்கிறது. ஜே.ஆர் ஒருமுறை யாழ்ப்பாணக் குடாநாட்டை எமக்கு வழங்க தயாராக இருந்தார். அதன் பின்னர் டொனமோர் அரசியலமைப்பின் 29 ஆவது சட்டப்பிரிவை நாம் இழந்துள்ளோம். நாங்கள் 13 ஆவது திருத்தத்தை திரும்ப இழந்துவிட்டதாகத் தெரிகிறது. இன்றைய அரசியலமைப்பில் எங்களிடம் உள்ள குப்பைத் தொட்டிகளுடன் ஒப்பிடுகையில் இன்று அது கவர்ச்சிகரமானதாக உள்ளது. சந்திரிகாவின் 2000 ஆண்டு அரசியலமைப்பை நம்மில் பலர் எதிர்த்தோம். ஆனால் , அது கிடைத்திருந்தால் இப்போது எமது கனவு நனவாகியிருக்கும். தற்போது மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பேய்க்காட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே அரசாங்கத்துடன் இருக்கும் கைக்கூலிகளைத் தவிர வேறு எந்தத் தமிழனும் மாவட்ட சபைகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். ஆனால் காலம் நமக்கு எதிராக உள்ளது.

சட்டத்தின் ஆட்சி இல்லை இலங்கையில் சட்டத்தின் ஆட்சி இல்லை என்றால் தமிழர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. எனவே, நாகானந்த கொடித்துவக்கு எனக்கு அனுப்பிய மின்னஞ்சலில் சட்டத்தின் நிலை குறித்துக் கூறியிருப்பது உண்மைதான். **"**சட்டத்தின் ஆட்சி தோல்வியடையும் போது, மற்ற அனைத்தும் தோல்வியடையும்.**"**

நாகானந்த கொடித்துவக்கு கூறுகிறார், **"**எந்தவொரு ஜனநாயகத்திலும், அரசின் அனைத்து உறுப்புகளின் மீதும் இறையாண்மையை அனுபவிக்கும் மக்கள்தான் உச்ச அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். மேலும் நீதித்துறையின் கடமை, மக்களின் நீதித்துறை அதிகாரத்தை முற்றிலும் சட்டத்தின்படி கண்டிப்பாக நம்பிக்கையுடன் செயல்படுத்துவது மற்றும் மக்களின் உண்மையுள்ள மற்றும் அச்சமற்ற காவலாளியாக இருப்பது. எனினும், நீதிபதிகள் நேர்மையற்றவர்களாக இருந்தால், மற்றும் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளையும் வேண்டுமென்றே பதிவு செய்யவில்லை என்றால் இதை உணர முடியாது. ஆனால் நீதிமன்ற ஆவணங்கள் முழுமையடையாமல் அறைகளில் கூட பூட்டி வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார்.

வன்முறையற்ற குழப்பத்தை ஊக்குவித்தல் இந்த சூழ்நிலையில் தமிழர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. சிங்கள அரசுக்கு ஈழம் வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாற்காலியின் கீழ் குண்டு வெடித்த சில நாட்களுக்கு பிறகு, **Frontline** செய்தியாளர் ஆர். கே. இராதாகிருஷ்ணனுக்கு அளித்த நேர்காணலில் **"**நாம் இப்படி இருக்க முடியாது.
சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டின் அடிப்படையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதிலேயே முதன்மையாக அக்கறை கொண்டுள்ளனர். (**The Island**, 03.12.2022 இல் மறுபதிப்புச் செய்யப்பட்டது).

நம்மால் இதுபோன்று தொடர முடியாவிட்டால், நான் ஒப்புக்கொள்கிறேன், ஏன் இப்படித் தொடர வேண்டும்? ஏன் நாடாளுமன்றம் செல்ல வேண்டும்? எங்களின் துணிச்சலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்துவதை நாங்கள் இரசிக்கிறோம். நாங்கள் மகிழ்ச்சியுடன் அதனை நல்ல காரியம் என்று கூறுகிறோம். மகிழ்ச்சியில் அவர்களின் பேச்சுக்களைப் பரப்புகிறோம். ஆனால் இந்தப் பேச்சுக்கள் நம்மை எங்குமே கொண்டு செல்லாது.
இது அரசு ஏழ்மையில் உழலும் காலம். அவர்கள் அனைத்துலக நாணய நிதியத்திடம் (**IMF**) இருந்து கடனைப் பெறுவார்கள் அல்லது ***GSP- Plus*** சலுகையை புதுப்பிப்பார்களா என்பது, மனித உரிமைகள் சிக்கல்களை அரசாங்கம் எவ்வாறு கையாளுகிறது என்பதைப் பொறுத்தே அமையும்.
தமிழ் மக்களின் குரல் சத்தியாகிரகத்தின் போதுதான் அதிகம் ஒலித்தது. இது மீண்டும் ஒத்துழையாமைக்கான நேரம் ஆகும்.

எமது நா.உறுப்பினர்கள் தங்கள் இருக்கைகளை விட்டுக்கொடுக்க வேண்டும். இனி நா.உறுப்பினர்கள் தேவையில்லை. ஒரு சில ஐந்தாம் படையினர் (**quislings**) முன்னர் செய்தது போலவே 10 வாக்குகளுடன் (அல்லது புலிகள் இல்லாததால் கூடிய வாக்குகளால்) நாடாளுமன்றத்திற்குள் நுழைவார்கள். ஆனால் அவர்கள் எங்கள் உண்மையான பிரதிநிதிகளாக இருக்க மாட்டார்கள். வேண்டும் என்றால் அவர்கள் ஒரு அடையாளச் சின்னமாக கலந்து கொள்ளலாம்.
ஆனால் அரசாங்கத்தில் பங்கேற்க முடியாது. அரசு ஊழியர்கள் வேலைக்குச் சென்று சம்பளம் பெறட்டும். ஆனால் பொதுமக்கள் அரசு அலுவலகங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.
வன்முறையற்ற குழப்பம் இருக்கட்டும். இது அரசாங்கத்தையும் கடன் வழங்குபவர்களையும் சிக்கல்களைத் தீர்க்கக் கட்டாயப்படுத்தும். அரசாங்கத்துடன் பேசுவது அரசாங்கத்துக்கு உதவுகிறது.
அவர்கள் ஈழத்தை சிறிது சிறிதாக கைவிடுவதற்கான எண்ணம் இல்லாமல் சிக்கலைத் தீர்க்க முயற்சிக்கிறோம் என்று உண்மைக்குப் புறம்பாகச் சொல்ல வைக்கும்.

நன்றி: சோமீதரன் எழுதிய ஆவணப்படமான தாய்நிலம்: நில அபகரிப்பு - இலங்கையில் உள்ள தமிழர்களுக்கான உண்மையான தொற்றுநோய் என்ற ஆவணப்படத்தின் உள்ளடக்கத்தை அங்குள்ள எனது சொந்த ஆவணங்கள் மற்றும் என்னுடன் நெருக்கமாகப் பணியாற்றும் நண்பர்களிடம் இருந்து தரவுகளை சரிபார்த்த பிறகு பயன்படுத்தினேன். இந்த ஒரு மணி நேரத் திரைப்படத்தை நல்ல இதயமுள்ள சிங்கள மக்கள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன்.

முற்றும்.

(ஆங்கில மூலம் **https://www.colombotelegraph.com/index.php/elam-or-elaam-a-case-for-promoting-nonviolent-chaos/. -** *தமிழாக்கம்: கனடா நக்கீரன்*)

# இவ்வார ராசிபலன்

**23-12-2022 வெள்ளி தொடக்கம் 29-12-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உருவாகக்கூடிய வாரம். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சியுண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உறவினரால் தொல்லை நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை நேரும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் உபாதை ஏற்பட்டு தீரும். வருமானம் சேரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபாரம் மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தீய எண்ணங்கள் விலகும். எள் தானம் ஏற்றம் தரும். தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். குடும்ப அன்யோன்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**ரிஷபம்:** பணவரவு லாபம் தரும் வாரம். புத்தி சாதுர்யம் கூடும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். வியாபாரம் உயரும். ஆலய தரிசனம் ஆறுதல் தரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கன்னியம் கூடும். பூர்வீக சொத்து வரும். தொழில் சிக்கல் மறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். எதிர்பாராத நன்மை கிட்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மன அமைதி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,O




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வு தரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வராத கடன் வந்து சேரும். பண வரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். பட்டம், பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத வாரம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ் எண்: 8,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கக்கூடிய வாரம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 2,1,6,4
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,T




**சிம்மம்:** செல்வாக்கு உயரக்கூடிய வாரம். உடல்பொலிவு கூடும். உற்சாகம் கலை கட்டும். வேலைபளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சூழ்நிலைகள் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகள் தரும். ஆடை, அணி-கலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கண் நோய் வந்து போகும். கவலைகள் ஒழியும். கால்நடைகளால் லாபம் உண்டு. வியாபார விருத்தி ஏற்படும். வேற்றுமை விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,A

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'



Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பணப்பற்றாக்குறை தீரும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். வாழ்வில் வசந்தம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,P




**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலைகட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் தரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**விருச்சிகம்:** ஊக்கத்தோடு செயல்படும் வாரம். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சினைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் விலகும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புகள் அகலும். சிறப்புக்கள் சேரும். தாய் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர் விலகுவர். திடீர் பயணம் ஏற்படும். மாற்று யோசனை பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். வாயில் தேடி வரன் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு ஏற்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். வேண்டாத நபர் விலகுவர். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை இலாபம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மனஅமைதி கூடி வரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,I




**மகரம்:** பிரயாணத்தில் பிரபல்யம் கிடைக்கக்கூடிய வாரம். விரும்பிய பொருள் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பங்குச் சந்தையில் லாபம் பெருகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். தனலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். மனக்குழப்பம் நீங்கும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,R

(தொடர்ச்சி 30 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1028



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
## புற்றளை, பருத்தித்துறை

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் – செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானை
காதலால் கைகூப்புவர்தம் கை"

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபகுதியிலுள்ள சிறப்புடைய பழமைமிக்க, புகழ்மிகுந்த பட்டினங்களுள் ஒன்றாக பருத்தித்துறை விளங்குகின்றது. துறைமுகமும், நகரும் இணைந்த இடமாகப் பருத்தித்துறை விளங்குவதால், பல்வேறுவழிகளிலும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. இலங்கையின் புவியமைப்பின் அடிப்படையிலும் பருத்தித்துறை முக்கியத்தவம் பெற்றுள்ளது. வடக்குத்தெற்காக முறையே பருத்தித்துறை முனையையும் தெய்வேந்திரமுனையையும் நேர்கோடாகக்கொண்டு அளவிட்டு, இலங்கையின் நீளம் 270 மைல்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பலவகைச்சிறப்புக்களைப்பெற்ற பருத்தித்துறையைச் சார்ந்து பல குறிச்சிகள் காணப்படுகின்றன. இவற்றுள் தமிழும், சைவமும் சிறப்புற்றோங்கும் குறிச்சியாக புற்றளை காணப்படுகின்றது.

புற்றளைக் குறிச்சியில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயம் அருளும், புகழும்கொண்ட ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயம் பருத்தித்துறையின் தென்திசையில் வளம்மிக்க மாவில் என அழைக்கப்படும் வயலின் வடமேற்குப்பகுதியில், அழகுற அமைந்து பொலிவுடன் விளங்குகின்றது. இங்குள்ள மக்கள் புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயத்தை, பிள்ளையார்கோவில் என அன்போடு அழைப்பர்.

புற்றளை சித்திவிநாயகர் என்ற பெயர் காரணப்பெயராகக் காணப்படுகின்றது. புற்றிலே சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி அன்பர்க்கு வேண்டும் வரமீந்து, அருள்பாலிக்கின்ற காரணத்தினால், இங்குள்ள விநாயகருக்கு சித்திவிநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. விநாயகர் எழுந்தருளியுள்ள குறிச்சிக்கும் புற்றளை என்ற பெயர் உண்டாயிற்று.

ஒருபொருள் குறித்த இருசொற்களான புற்று + அளை என்பன இணைந்து புற்றளை என சொல்லாக்கம் பெற்றுள்ளது. இப்பெயரைப் புற்று + தளை எனப் பிரித்து விளக்கம் கூறப்படுதலும் வழக்கில் காணப்படுகின்றது. புற்றளை எனத் தற்காலத்தில் வழங்கப்படும் இடத்திலுள்ள புற்று ஒன்றினை வெட்டியபொழுது, அங்கு பிள்ளையார் சிலை காணப்பட்டது. அப்பிள்ளையார் சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே புற்றளை விநாயகர்கோவில் அமைக்கப்பட்டது. சிலை புற்றிலிருந்து தளைத்தது அதாவது வெளிப்பட்டது என்ற காரணத்தினாலேயே இவ்விடம் புற்றளை எனப்பெயர்பெற்றதென வாய்மொழி விளக்கமாகக் காணப்படுகின்றது.

கி.பி 1505 ஆம் ஆண்டில் ஈழத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசரும், அதன்பின்னர் வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் இந்துமதத்தை அழித்து, அங்கு கிடைக்கப்பெறும் பொருட்களைச் சூறையாடுவதில் அக்கறை கொண்டவர்களாக விளங்கியுள்ளனர். அக்காலப்பகுதியில் இறைபக்திகொண்ட மக்கள் கோயிற் சிலைகளை மரத்தடியிலும், புற்றடியிலும், கிணற்றுள்ளும், கேணிகளுக்குள்ளும் மறைத்துவைத்துக் காப்பாற்றிய செய்தி வரலாற்று உண்மையாகும். இவ்வாறான சூழ்நிலையில் மறைத்து வைக்கப்பட்ட சிலைகள், காலநேர வர்த்தமானங்களுக்கமைய ஒவ்வொர் சூழ்நிலையில் வெளிப்பட்டமையையும் சமய வரலாற்றிலே காணக்கூடியதாயுள்ளது.

பருத்தித்துறைப்பிரதேசம் வெளிநாட்டவரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்ட பிரதேசமாக விளங்கியுள்ளது. இவர்களிடமிருந்து கோயிற்சிலைகளைக் காப்பாற்றும் நோக்கோடு, புற்றளை பிள்ளையார் சிலையும் மறைத்து வைக்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. பின்னாளில் இச்சிலை கண்டு பிடிக்கப்பட்டபொழுது அவ்விடத்திற்குக் காரணப்பெயராய் புற்றளை என்ற பெயர் ஏற்பட்டதெனக் கருதுவது பொருத்தமுடையது.

விநாயகர் திருமணமாகாத பிரமசாரியாக வணங்கப்பட்டாலும், பல்வேறிடங்களிலே விநாயகருக்கு சித்தி, புத்தி என்ற இரு மனைவியர் இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கைக்குத் தேவையான சித்தி, புத்தி என்ற இரு தத்துவங்களுமே விநாயகரின் மனைவியராகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. ஜைமினி முனிவர் - சித்தி என்பது மாயையினால் ஏற்படக்கூடிய ஒரு தோற்றம் என்றும், புத்தி அந்தத் தோற்றத்தை வலுப்படுத்துவதாகவும் உள்ளது என்றும் குறிப்பிடுகின்றார். இந்த இரு மாயைகளை விநாயகன் தன்வசப்படுத்தி, இவைகளுள் சிக்குண்ட மனிதர்களைக் காப்பாற்றுகின்றார் என்று குறிப்பிட்டுள்ளார். வேதாந்திகளோ மாயையை அகற்றி ஞானம் அளிக்கும் சாதனமாக விநாயகரைத் தியானிக்கின்றனர். யோகிகளோ மூலாதாரத்திற்கு ஆதாரமாகவும், குண்டலி யோகத்தில் சஹஸ்ர தளத்தை அடையவைக்கும் தெய்வமாகவும் தியானிக்கின்றனர்.

*வளரும்...*

## கனடாவில் நடைபெறவுள்ள "அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்" நூல் வெளியீட்டு விழா

கனடாவில் நடைபெறவுள்ள "அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்" நூல் வெளியீட்டு விழா.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வருகை தரும் விரிவுரையாளராகவும் பணியாற்றி உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளுக்கு பயணித்து சமய உரைகளையும் சிவாகம பணிகளையும் செவ்வனே ஆற்றிவருபவருபவர் தான் சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள்.

அத்துடன். யாழ்ப்பாணத்தில் "கோப்பாய் சிவம்" என்ற பெயரில் படைப்பிலக்கியத் துறையில் கடந்த40 வருடங்களுக்கு மேலாக அறியப்பட்டவருமான சிவஸ்ரீ சிவானந்த சர்மா அவர்கள் எழுதிய "அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்" நூல் வெளியீட்டு விழா கனடாவின் ஸ்காபுறோ நகரில் கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் 25-12-2022 அன்று நடைபெறவுள்ளது.

அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.






# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய வாரம். குடும்ப வளர்ச்சி பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மதிப்புகள் உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மனோ பயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்குச் சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 0,2,3,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,O




**மீனம்:** பணவரவும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். நினைத்தது நிறைவேறும். வாகன மாற்றமுண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவுகள் திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காரியம் கைகூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை தீரும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். சாதக சூழ்நிலைகள் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மெத்தனப் போக்கு மாறும். சந்தர்ப்பங்கள் சாதகமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். புதிய நட்பு உருவாகும். சுபச்செய்தி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,7,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M

## கடந்தவையும் கடப்பவையும் (39)

*அடைக்கலக் கதைகளோடு கனகாலம்கடக்காது
விடைபெற்றதோ கடந்தகாலக் கதைகள்என*

*எண்ணவும் தோன்றி இருக்கவாய்ப்பிருக்கு
முன்னர் என்றுமே இருக்காதஇடைவெளியால்,*

*அன்று கண்டுவந்த காட்சிகளைமனக்கண்முன்
நன்றாகக் கொண்டுவந்து எழுதியநாள்தொடர்ந்திருக்க - இடையில்*

*ஊருக்குப் போகும் உற்சாகம் உந்திடவே - அங்கு
நேருக்கு நேராகப் பார்த்து வந்தவைகள் - முன்புசொன்ன*

*அத்தனையும் நடந்ததுவா அந்நாட்டில்என்பதுபோல்
எத்தகைய தடையங்களும் இல்லாதுபோனதனால் - இனி*

*கடந்தகாலக் கதைகளை யார் கணக்கில் - இங்கு
எடுப்பாரென எண்ணியதால்இடையிலொரு தளர்ச்சி - அங்கு*

*இடங்களில் தான் மறுமலர்ச்சி மக்கள்
மனங்களில் இன்றும் பெருவறட்சியுள்ளதனை - மீண்டும்*

*இங்கு வந்தபின்பே உணர்ந்ததனால்மறுபடியும் - மனதைவிட்டு
மங்காத அந்த நிகழ்வுகளை இன்றையகாலத்தோடு*

*சேர்த்தே எடுத்துரைக்கும் வாய்ப்பாகநினைத்துக்கொண்டு
பார்த்திடுவோம் மறுபடியும் கடத்துவந்தபாதையினை*

*........அவ்வாறே அன்று*

*அடைக்கலம் கொடுத்தவர்கொடுத்திருக்க சிலர்
இடைக்கிடை காட்டியும் கொடுத்தனர் - அதனால்*

*திடீரென பக்கங்கள் பலவும் பதட்டத்தில்
'சடார் பிடார்' என்ற சத்தங்களோடுசோகத்தில் ஆழ - பின்*

*காலங்கள் மாற அணிவகுத்தோர்அடங்கினர் - தம்
தளங்களை மீறி வெளிவர முடியாமல் - ஆனாலும்*

*வான் குண்டுகள் பொழிந்து தள்ளின - கடலிலிருந்து
'விண்' என்று பீரங்கிக் குண்டுகளும்வந்தே விழுந்தன - தாம்*

*இருக்கும் இடத்தில் இருந்தும்குண்டுகளைச்
செலுத்தினர் பெரும் 'செல்' களாக*

*அழிவு அழிவு எத்தனை அழிவு - நாளுக்குநாள்
பெருமழைபோல் குண்டுகள் வீழ*

*இடிந்து விழுந்தன வீடுகள் பல - அப்போதான்
அழிந்து போயின அன்றைய பாசறைகள்*

*அன்றைய பாசறைகள் ஆருடையவை? - ஒளிந்து
நின்று ஆவேசமாய் போர்செய்தோர்பாசறைகள்*

*எப்படி இருந்தன அப்பாசறைகள்?.....*

*(தொடரும் அறிவோம்)*

**-- உமா மோகன் - Montreal- Canada --**

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 310
***** ***** ***** ***** **
கவிஞர் தியாரூ

தேக்குமரத் தேகங்கொள்
தேர்ந்தபெரும் ஞானம்கொள்!
வாக்குமாறா நேர்மைகொள்
வஞ்சமிலாப் பார்வைகொள்!

புயலெனவே வேகம்கொள்
பசுங்கிளியாய்ப் பாசம்கொள்!
வியர்வைதரும் உயர்வுகொள்
விருந்தெனினும் அளந்துகொள்!

விதைபோலே ஊக்கம்கொள்
விழுந்தாலும் ஏற்றம்கொள்!
தழைத்தோங்கும் வாழ்வுகொள்
தலைகவிழா மானம்கொள்!

தெய்வத்தின் சாயல்கொள்
தெய்வமென உன்னைக்கொள்!
தெய்வத்தை உன்னுள்கொள்
தெய்வாம்சத் தன்மைகொள்!






MORTGAGE FINANCIAL
Home / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
MERRY
CHRISTMAS
HAPPY
New Year
2023
"எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம் !"
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
Commercial Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
NESAN
416-908-5656
Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@subra.com
www.subra.com
Our off: 1585 Markham Rd, Unit # 406, Toronto, M1B 2W1, Canada
Powered by
MORTGAGE ALLIANCE
TD Canada Trust
RFA
WE DEAL WITH ALL BANKS
Scotiabank
EQUITABLE BANK
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
Brokerage # 10330
radius financial
RMG mortgages
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1394 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 23, 2022

## National Ethnic Press and Media Council of Canad hosted its Annual Christmas Celebrations and Awards Gala in Toronto

## கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம்



கடந்த 16-12-2022 அன்று வெள்ளிக்கிழமை மாலை கனடாவில் இயங்கிவரும் பல்லின பத்திரிகையாளர்கள் கழகம் நடத்திய வருடாந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம் ஆகியவை அடங்கிய அடக்கமான வைபவத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு சேவையாற்றியவர்கள் என்ற வகையில் யுகம் வானொலி நிறுவனத்தின் அதிபர் 'கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்' அவர்களுக்கும் வர்த்தகப் பிரமுகரும் கணக்காளரும் சமூக சேவையாளருமான சாந்தகுமார் தம்பியப்பா அவர்களுக்கும் சமூக சேவைக்கான சிறப்பு விருதுகள் வழங்கப்பெற்றன. (உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)



## ஸ்காபுறோ Designs 2 Prints உரிமையாளர் பிரபாகர் சண்முகநாதனின் திறமையைப் பாராட்டி விருதும் பணப்பரிசும்

ஸ்காபுறோவில் அமைந்துள்ள **Majestic City** தமிழர் உள்ளக வர்த்தக அங்காடியில் இயங்கிவரும் **Designs 2 Prints** உரிமையாளர் திரு பிரபாகர் சண்முகநாதனுக்கு அவரது வர்த்தக நிறுவனத்தை கடுமையான உழைப்பினால் தொடர்ந்த நடத்தி வரும் திறமையைப் பாராட்டி இன்று விருதும் பணப்பரிசும் வழங்கப்பெற்றது.

ஸ்காபுறோவில் மார்க்கம்-ஸடீல்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சேவை நிறுவனமான **Frontline Community Centre** மற்றும் ரொறன்ரோ நகரசபை இணைந்து நடத்திய ஒரு ஆய்வு மற்றும் நேர்காணலின் அடிப்படையில் இந்த விருது அவருக்கு வழங்கப்பெற்றது

இங்கே காணப்படும் படத்தில் ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுவான் சென் அவர்கள் அவருக்குரிய பணப்பரிசையும் விருதினையும் வழங்குவதையும் அருகில் **Frontline Community Centre** நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி விஜயா குலா நிற்பதையும் காணலாம்.

## Sri Lanka Accountants Association in Canada hosted Annual Awards Gala

## கனடாவில் "இலங்கை கணக்காளர்கள் சங்கம்" நடத்திய வருடாந்த இராப்போசன விருந்து









கனடாவில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "இலங்கை கணக்காளர்கள் சங்கம்" தனது வருடாந்த இராப்போசன விருந்து மற்றும் விருதுகள் வழங்கல் நிகழ்வை கடந்த 17ம் திகதி சனிக்கிழமையன்று மார்க்கம் நகரத்தில் அமைந்துள்ள **Hilton Hotels** மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது. தற்போதைய இயக்குனர் சபையினர் தலைவர் மயுரன் அவர்கள் தலைமையில் விழாவை நடத்த ஏற்பாடுகளைச் செயதிருந்தனர்.

பல வர்த்தக நண்பர்கள் இந்த விழா சிறப்பாக நடைபெற ஆதரவை வழங்கினார்கள். அவர்கள் அனைவரும் மேடையில் கௌரவிக்கப்பெற்றார்கள். உதயன் பிரதம ஆசிரியரும் அங்கு சமூகமளித்து தனது பாராட்டுக்களை நண்பர்களுக்குத் தெரிவித்தார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கனடியத் தமிழர்களால் யாழ்.தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் வழங்கப்பெற்ற பத்து மில்லியன் பெறுமதியான மருந்துகள்

கனடியத் தமிழர்கள் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான உயிர் காக்கும் மருந்துகளைத் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். கனடியத் தமிழர் பேரவை, ஆண்டு தோறும் நடாத்தும் நிதிசேர் நடை பவனி ஊடாகப் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர் காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 செப்ரெம்பர் மாதம் 11 ஆம் தேதி கனடியத் தமிழர் பேரவையினரால் பதினான்காவது வருடாந்த தமிழ்க் கனடிய நிதிசேர் நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டது. (உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)




தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136